# மாதநிலா

MATHANILA மாதநிலா

உங்கள் குடும்ப நிலா

நிலா - 1 Regd No: 1419 ஜூன் 2015




நஸ்ரியா கணவருடன் ஆண்ட்ரியா கிசு கிசு!

யார் இவர்? வெல்லுங்கள்...! 500 ரூபாய் ரீலோட் (மேலதிக விபரம் உள்ளே...)

அதிசயம் ஆனால் உண்மை! மொபைல் போன் மூலம் வயதை கண்டறியலாம்

மாதம் ஒரு குட்டீஸ்


GIRI ELECTRONIC SUPER MARKET



No: 286, Kandy Road, Vavuniya. 024 5671354, 077 6143500

Pro: M.Muguntham

# சன் றில்லேஸ்

**Sun Drillers** සන් නළ ළිඳ

இயந்திரத்தால் ஆழ்துளைகிணறு
அடித்துக் கொடுக்கப்படும். கான்பம் மற்றும்
மோட்டர் பொருத்தி தரப்படும்.

**077 2463000 - 077 5900666**

A9 Road, Jaffna, Kilinochchi, Vavuniya,
sundrillers1@gmail.com



எங்கும் செல்வோம்
எதிலும் வெல்வோம்



## மாதம் ஒரு குறள்

அதிகாரம் : ஆள்வினையுடைமை
குறள் : 616

**முயற்சி திருவினை ஆக்கும்**
**முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்.**

**பொருள் :** முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும். முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையைச் சேர்த்துவிடும்.


**மாதநிலா**
MATHANILA මාතනිලා உங்கள் குடும்ப நிலா!

விலை: 50/-

நிர்வாக இயக்குனர்,
**திரு.எஸ்.விஜய்**

கணினி வடிவமைப்பு, அச்சுப் பதிப்பு மற்றும் வெளியீடு:
**விஜய் அச்சுப் பதிப்பகம்**
172, மில் வீதி, வவுனியா.
024 222 5799 / 077 900 9491



தொடர்புகளுக்கு

"மாதநிலா"
172, மில் வீதி, வவுனியா.

024 222 5799

077 900 9491
077 990 3723

mathanila@yahoo.com



தனிப்பிரதி: 50/-
அரையாண்டுச்சந்தா: 350/-
ஆண்டுச் சந்தா: 700/-
(தபால் செலவு அடங்கலாக)



இச்சஞ்சிகையில் வெளிவந்திருக்கும் ஆக்கங்களுக்கு அவரவரே பொறுப்பாளிகளாவர்

விளம்பரங்களில் உள்ள விடயங்களுக்கு விளம்பரதாரர்களே உரித்தாவார்கள்


# என்னுள் வளரும் நிலா...

**நிலையான அமைதி நிலவட்டும், நினையாத கனவும்**
**நிலைக்கட்டும், நின்மதியான வாழ்வு நிகழட்டும்,**
**நிஜமான அன்பு நீழட்டும்.**

எனதன்பின் உள்ளங்களே!

"மாதநிலா" என்ற இந்த பல்சுவை சஞ்சிகையை வெளியிடுவதில் பெருமகிழ்வு அடைகின்றேன். இச்சஞ்சிகை அதிக பக்கங்களுடனும் கைண்கவர் அளவிலும் இருப்பது சிறப்புப் பெறும். இதில் கல்வி, சுகாதாரம், கணனி, உளவியல், சோதிடம், கலை இலக்கியம், சினிமா, விளையாட்டு என பல அம்சங்களை தாங்கி வருகின்றது.

விசேடமாக கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றோம். அதனால் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்காக பரீட்சையை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள வினாவிடை மாதா மாதம் தொடர்ந்து வரவிருக்கின்றது. மற்றும் வர்ணம் தீட்டி பரிசில்களை வெல்லுங்கள், குழந்தைகளுக்கான சிறுகதைகள், குழந்தைகளுக்கு மூளைக்கு வேலை கொடுக்கும் அறிவுக்குச் சவால், போன்றவைகளும் சேர்க்கப்பட்டுள்ளது.

பெண்களுக்காக பெண்கள் நேரம், ஒவ்வொரு மாதமும் இராசிபலன் இன்னும் பல விடயங்களுடன் தொடர்ந்து மாதா மாதம் பிரகாசிக்க இருக்கின்றது. தொடர்ந்து நீங்கள் மாநிலா வாங்கி படித்து பயன்பெற்று இச்சஞ்சிகை சம்பந்தமாக உங்களுடைய கருத்துக்களையும் விமர்சனங்களையும் எதிர்பார்த்து நிற்கின்றோம். அதுவே மாதநிலாவின் வளர்ச்சிக்கு உரம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

பாராட்டுகளை விரும்பாத மனிதன் இல்லை, அது போல தன் குறையை திருத்த மற்றவர்களுக்கு வாய்ப்பளிக்காதவன் மனிதனே இல்லை. இதைக் கொஞ்சம் புரிந்துகொண்ட சராசரி மனிதன் நான். தயவுசெய்து நிறைகளை தட்டிக்கொடுத்து தவறுகளை என்னிடம் சுட்டிக்காட்டுங்கள் அதுவே மனதிற்கும் எதிர்காலத்திற்கும் புத்துணர்ச்சி தரும்.

**-எஸ்.விஜய்**

# பொருளடக்கம்


மாணவனின் கல்வி மூலம் மாற்றம் செய்வோம் 3

நேரத்திற்கு சாப்பிட்டால் தான் அல்சர் வரும் 4

மாதம் ஒரு புத்தகம் 6

சிந்தனைக்கு சவால் 8

எனக்கு ரொம்ப பிடிக்கும் 10

விளையாட்டுச் சங்கதி 12

மூளைக்கு வேலை கொடுங்கள் 15

உங்கள் பென்ரைவ் வேகமாக செயல்பட வில்லையா 16

பெண்கள் நேரம் 18

அமைதி அழகானது 20

திருக்கேதீஸ்வரம் - ஓர் பார்வை 22

மாதநிலா சிறுகதை - எறும்பு திண்ணுது 24

இலங்கையின் கணினி மேதை 27

சினிமா பக்கம் 28

மதம் 31

ஆட்டோவில் பயணம் செய்யும் பெண்களுக்கானது 32

அஞ்சான் கேள்வி-பதில் 34

பூங்கோதை தொடர்கதை 37

கவிதைச்சாரல் 42

அறிவுக்கு விருந்து 45

உலக சுற்றாடல் தினம் 46

வரலாற்று நாயகன் புரூஸ்லீ 48

இல்லத்தரசிகளுக்கு இனிய யோசனை 50

ஜப்பானியர்களிடமிருந்து நாம் கற்கவேண்டிய பண்புகள் 52

# மாணவனின் கல்வி மூலம் மாற்றம் செய்வோம்

ந.அருளானந் வவுனியா

மனதைரியம் கொண்ட மாணவனே! வலிமையின் வம்சமே! எதிர்ப்புக்களை எதிர்பார்த்திருப்பவனே! தோல்விகளை தோளில் சுமந்து செல்லும் வைராக்கியத்தின் வாரிசே! உலகத்தின் உச்சியில் உயர வளப்போகிறவனே! முட்களின் மேல் நடப்பவனே! இப்படியான வீர வசனங்களால் உன்னை அலங்கரிக்க என் செந்தமிழ் ஆசைப்படுகின்றது.

நான் நம்புகின்றேன் நீ ஏன் உன்னை நீயே நம்பாமல் நகரசாக்கடைக்குள் தண்ணீருக்காய் போராடுகிறாய்? நீ தீ இல்லையா? நீ விதை இல்லையா? நீ வரலாற்று நாயகன் இல்லையா? இல்லை தோல்வி தான் என் உலகம் என்றும் சாதிப்பதை விட சாய்ந்துறங்குவது சிறந்தது என எண்ணுகிறாயா?

தோழனே! நீ முட்டாள்களின் பக்கத்தில் உன் நட்பை வளர்க்கிறாய், சோம்பலை உன் ஆயுதமாக பாவிக்கிறாய் நீ மாறவேண்டாமா? மாற்றம் தர முன்வர வேண்டாமா? நல்ல மாற்றம் ஏமாற்றம் இல்லை என்பதை நம்மவருக்கு உணரவைக்கவேண்டாமா? சீரழிந்து போகும் சமூகத்தை மாற்ற வேண்டாமா? இல்லை மாற்றத்தின் பாதையே முட்டாள்களின் உலகம் என போலிக்கற்பனைகளால் உன்னை நீயே ஏமாற்றிக்கொண்டு வாழ்கிறாயா?

சிந்தித்துப்பார்! உனக்காக சில ஞானங்கள் உன்னில் மறைந்து கிடக்கும் நீ அறியாத அற்புதத்திறனை உன்னை அறியவைக்கும் முயற்சி நீ பயணித்து கொண்டிருப்பது மூன்றுமணிநேர யுத்தத்திற்காக, விரயமாகும் விடியலோடு போராட, பாலைவனங்களில் நிழல் தேட, பாறைகளை சிற்பமாக்க, உன் இரத்தவுறவுகள் சிந்திய வியர்வைக்காக, நீ முட்கள் முளைத்த பாதைகளில் பாதுகைகள் இன்றி பயமில்லாமல் விழிமூடி பயணிக்கிறாய் இவையெல்லாம் எதற்காக?

(தொடரும்...)



# 4 நேரத்திற்குச் சாப்பிட்டால் தான் அல்சர் வரும்


நேரத்திற்குச் சாப்பிடாவிட்டால் அல்சர் வரும் என்று உங்களுக்கு இத்தனை நாளும் போதிக்கப்பட்டுள்ளது. அல்சர் பெரும்பாலும் நேரா நேரத்திற்குக் கடிகாரத்தைப் பார்த்துச் சாப்பிடுபவர்களுக்கே வருகிறது என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். ஒரு பாத்திரத்தில் தயிர் சாதமோ அல்லது சாம்பார் சாதமோ எடுத்து வைத்து ஒரு பத்து பதினைந்து நாட்கள் கழித்துப் பாருங்கள். இப்போது அந்தச் சாதம் கெட்டுப்போய் நாற்றம் எடுக்கும். சில சமயம் புழுக்கள்கூட வந்திருக்கலாம். மீண்டும் அந்தப் பாத்திரதை மூடி அப்படியே வைத்து விடுங்கள். மறுபடியும் ஒரு பத்து பதினைந்து நாட்கள் கழித்துப் பாருங்கள். அந்தக் கெட்டுப்போன சாதம் விஷமாக மாறி, அந்தப் பாத்திரத்தைப் பாதித்து ஓட்டை போட்டிருப்பதைப் பார்த்திருக்கலாம் (இதை வீட்டிலேயே சோதித்துப் பாருங்கள்).

இப்போது அல்சர் எப்படி வந்தது என்று உங்களால் சுலபமாகப் புரிந்துகொள்ள முடியும். நீங்கள் நினைப்பது போல் நேரத்திற்குச் சாப்பிடாவிட்டால் அல்சர் வரும் என்பதெல்லாம் பொய். பசிக்காமல் நேரத்திற்குச் சாப்பிடும்போதுதான் அல்சரே வருகிறது. பசித்துச் சாப்பிடும் போதுதான் வயிற்றில் ஜீரண நீர்கள் சுரக்கின்றன. வயிற்றில் நேரத்திற்கு அலாரம் வைத்துக்கொண்டு ஜீரண நீர்கள் சுரப்பதில்லை. அந்தந்த நேரத்திற்கு வருவதற்கு இது ஒன்றும் பேருந்தோ, ரயிலோ அல்ல. என்றைக்காவது யோசித்திருக்கிறீர்களா, நேரா நேரத்திற்குச் சுரப்பதற்கு அங்கு எந்த விதமான ஏற்பாடும் கிடையாது. மனித உடலானது முற்றிலும் உணர்வுகளால் ஆனது. உணர்வுகளே மனித உடலை வேலை செய்யத் தூண்டுகின்றன, வேலையை முடிக்கவும் தூண்டுகின்றன. செயல்படுத்தவும் வைக்கின்றன. நேரத்திற்கு ஜீரண நீர் சுரந்து விடும். அப்போது வயிற்றில் சாப்பாடு இல்லையென்றால் அல்சர் புண் வந்துவிடும் என்பது போன்ற காமெடி வேறு எதுவும் இல்லை.

நேரத்திற்குச் சாப்பிடாவிட்டால் அல்சர் வருகிறதென்றால்,இலங்கையில் பெரும்பாலான ஏழை மக்களுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் அல்சர் வந்திருக்க வேண்டுமே! பெரும்பாலும் அல்சர் வருவது மூன்று வேளையும் நன்கு சாப்பிடுபவர்களுக்கே என்பதைக் கவனியுங்கள். நீங்கள் பசிக்காமல் மூன்று வேளையும் சாப்பிடும் போது, ஜீரண நீர்கள் சுரக்காத நிலையில் வயிற்றில் இருக்கும் உணவு அங்கேயே தங்கி, புளித்து, கெட்டு, கெட்ட வாயுக்கள் உருவாகத் துணை புரிகிறது. தினம்தோறும் இதுபோன்ற செயல் தொடர்ந்து நடைபெறும்போது, கெட்டுப் போன உணவு விஷமாக மாறுகிறது. பாத்திரத்தில் வைத்த உணவு எப்படி விஷமாக மாறுகிறதோ.... அப்படி விஷமாக மாறிய உணவு, உங்கள் வயிற்றில் அல்சரை (புண்களை) உருவாக்குகிறது என்பதை

உணர்ந்துகொள்ளுங்கள். ஜீரணம் கெட்டால்தான் அல்சர் வருமே ஒழிய, ஜீரணிப்பதற்கு அங்கு ஒன்றுமே இல்லாத போது அல்சர் வராது. சாப்பிடாமல் இருந்தால் உடல் சோர்வடைந்து, சத்துக் குறைபாடு ஏற்பட்டு, அது சம்பந்தமாக நோய்கள் வேண்டுமானால் வரலாம்.

அல்சர் வயிற்றில் மட்டுமல்லாமல், உடலின் எந்தப் பாகத்தில் வேண்டுமானாலும் தோன்றலாம். நாட்பட்டு வெளியேற முடியாமல் தேங்கும் கழிவுகள் அந்த இடத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. பாதிக்கப்பட்ட அந்த இடத்தில் புண்கள் உருவாகின்றன. அதையே அல்சர் என்கிறோம். அல்சர் என்ற புண்கள் குணமாக வேண்டுமானால், தேங்கியுள்ள கழிவுகளை முதலில் வெளியேற்ற வேண்டும். கழிவுகள் வெளியேறாவிட்டால் மீண்டும் மீண்டும் அல்சர் வந்துகொண்டே தான் இருக்கும். அல்சர் வந்துவிட்டால் உங்கள் உடலில் கழிவுகளின் தேக்கம் நிறைய உள்ளது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.



## அபி ஜெயச்சந்திரனின்

# "கறுப்பு வெள்ளைப்படம்"

### –ஒரு பார்வை




வவுனியா கோவில்குளம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும் வவு/தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னைநாள் ஆசிரிய மாணவரும், மன்/பெரியமடு ம.வி ஆசிரியருமாகிய அபி ஜெயச்சந்திரன் (கலாரசிகன்) அண்மையில் வவுனியாவில் "கறுப்பு வெள்ளைப் படம்" எனும் கவிதை நூலொன்றைப் படைத்துள்ளார்.

முதல் பக்கம் எனும் தலைப்புடன் ஆரம்பமாகி இக்கவிதை நூல் கடைசிப்பக்கம் எனும் தலைப்புடன் நிறைவடைகிறது. இதிலுள்ள முதல் பக்கம் எனும் கவிதை

"என் கொப்பியின் முதல் பக்கமும்
என் வெற்றிக்கு அடித்தளம் இட்ட
என் முதல் தோல்வியும்
இன்னும் அழகாய்த் தான் இருக்கிறது..."

என்று ஆரம்பிக்கின்றது. இத்தொகுப்பால் நவீன காதல் எனும் தலைப்பிடப்பட்ட கவிதையில் கைப்பேசி, குறுந்தகவல், மின்னஞ்சல், முகப்புத்தகம், ஸ்கைப், வைபர், என்பவை கோடிட்டு காட்டப்பட்டுள்ளன. முழுமையாக கறுப்பு வெள்ளை நிறத்திலான அட்டைப்படத்தைத் தாங்கி நாற்பத்தாறு பக்கத்தில் இக் "கறுப்புவெள்ளைப் படம்" வெளிவந்திருக்கிறது பத்து நீண்ட கவிதைகளையும் குறுங்கவிதைகளில் தலைப்புக்கள் இடப்பட்டும் இடப்படாமலும் பல கவிதைகள் இடம்பிடித்துள்ளன.



மாதநிலாவில்... "மாதம் ஒரு புத்தகம்"

எழுத்தாளர்களே....! படைப்பாளிகளே....!


உங்கள் புத்தகங்கள் தொடர்பாக எங்கள் பார்வை மாதநிலா வில் இடம்பெற வேண்டுமா....?
அப்படியாயின் இரண்டு பிரதிகளை எமக்கு அனுப்பி வையுங்கள்

ஆசிரியர்,
"மாதநிலா"
இல: 172, மில் வீதி, வவுனியா.

## நோர்வே விஜேந்திரனின்

# "பசுமை தேடும் பறவைகள்"

### -ஒரு பார்வை




புலம்பெயர் தேசத்தினைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் ஈழத்து படைப்பாளிகள் வரிசையில் வவுனியா தமிழ் மகாவித்தியாலய பழைய மாணவர் பாலசிங்கம் விஜேந்திரன் "பசுமை தேடும் பறவைகள்" எனும் கவிதை நூலொன்றைப் படைத்துள்ளார். இது இவரது கன்னிப்பிரசவம். அவரது அம்மாவின் ஆசியுரையுடன் ஐம்பது பக்கங்களைத் தாங்கி முப்பது கவிதைகளுடன் வெளிவந்திருக்கின்றது. முதல் கவிதை "என் இலட்சிய கர்த்தா" எனும் தலைப்பிடப்பட்டு வவுனியாவில் நீதிபதியாக கடமையாற்றிய இளஞ்செழியனை கோடிட்டு காட்டுகிறது. அக்விதையின் ஓரிடத்தில்



(பக்கம் 11)

"இயல்பான நேர்மை
கொள்

இறுக்கமான தீர்ப்பு
சொல்லும்

இளஞ்செழியன் நீதிபதி

இறையருளின் ஓர் வடிவே.."

என்றவாறு இக்கவிதை நீள்கிறது. மேலும் "பசுமை தேடும் பறவைகள்" எனும் தலைப்பிடப்பட்ட கவிதை சொந்த ஊரைவிட்டு அவுஸ்திரேலியா பயணிக்கும் அபலையின் ஏக்கமாகக் காணப்படுகின்றது. நான்குவரிக் கவிதைகளை பந்தியமைப்பாக அதிகம் சேர்த்திருக்கிறார். இவர் புலம் பெயர் தேசத்தில் வாழ்வதால் ஏக்கங்களாக பின்வரும் தலைப்புக்களை இட்டுள்ளார். மேலும்

தமிழ் எங்கே, பள்ளித்தோழி, நோர்வேயின் அழகிய பேர்கள் நகரம், அன்னியக் கடலில் அனாதையினமாய். வெளிநாட்டு வாழ்வு, தாய் மண், தற்காலிக வீடு, எனும் தலைப்புக்களூடாக இவர் புலம் பெயர் உறவொன்றின் மன ஆதங்கத்தை பதிவிட்டிருக்கிறார் இருப்பினும் கவி வரிகளுக்குப் பின்னுள்ள ஓவியங்களை தவிர்த்திருக்கலாம் எனவும் சந்தத்தை சற்றுச் சேர்த்திருக்கலாம் எனவும் எண்ணத்தோன்றுகிறது.

**-முல்லைத்தீபன்**

# சிந்தனைக்கு சவால் 1

இம்மாத சவால்

"வீதி விபத்து"



வாசக உள்ளங்களே! கவிதைகள் புனைய களம் தேடி காத்திருப்பவர்களே!
உங்களுக்காக, உங்கள் கவித்திறனை தூண்டுவதற்காக நாங்கள் அமைத்து தரும் சிறு மேடைதான் இந்த "சிந்தனைக்கு சவால்" நீங்கள் செய்யவேண்டியது அருகில் உள்ள உருவப்படத்திற்கு உங்கள் சிந்தனைக்கு எட்டியவாறு உள்ளத்து உணர்வுகளை 10 வரிகளுக்கு மேற்படாதவாறு எழுதி முன் பக்கத்திலுள்ள எமது வழமையான முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சிறந்த 3 கவிதைகளுக்கு பணப்பரிசுகள் வழங்கப்படும்.

பிரதான அனுசரணை:
VIJAY PRINTING CENTRE
விஜய் அச்சுப் பதிப்பகம்
All Type of Printing Works & Wedding Cards
No:172B, Mill Road, Vavuniya.
TP: 024 222 5799 / 077 900 9491
Email: vavuniyavpc@yahoo.com

## மாணவர் குழு

மாணவச் செல்வங்களே,
"மாணவர் குழு" என்ற பகுதியில் இணைய விரும்புகின்றீர்களா, அப்படியாயின் தங்களுடைய பெயர், முகவரி, தொ.பே.இல, பாடசாலை, தரம் என்பவற்றை எழுதி தங்களுடைய புகைப்படத்துடன் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். வருடாவருடம் இக்குழுக்களுக்குள் போட்டிப்பரீட்சைகள் நடாத்தி பரிசில்கள் வழங்கப்படும்.

## அதிசயம் ஆனால் உண்மை...

### உங்கள் கைபேசி எண்ணை வைத்து உங்கள் வயதை கணிக்கலாம்...

1)உங்கள் மொபைல் எண்ணின் கடைசி ஒரு எண்ணை எடுக்கவும்
2)அதை இரண்டால் (2) பெருக்கவும்..
3)அதனுடன் ஐந்தை (5) கூட்டவும்
4)கிடைக்கும் விடையை 50 ஆல் பெருக்கவும்
5) வரும் தொகையுடன் 1764 ஐ கூட்டவும்
6)அதனுடன் நீங்கள் பிறந்த வருடத்தை கழிக்கவும் (உ-ம்-1985,1987,1956 etc)
இப்பொழுது உங்களுக்கு (3 digit) ஒரு விடை கிடைத்திருக்கும்...
அதில் முதல் எண் உங்கள் மொபைலின் கடைசி எண்... மற்ற (2 digit) எண் உங்களின் வயது....!
செய்து பாருங்க. கண்டிப்பாக ஆச்சரியப்படுவீங்கள்

# மனம் விட்டுப்பேசுங்கள் 9
# மனமுறிவைத் தவிருங்கள்

**ஒரு வியட்நாமியக் கதை!**



ஒரு இராணுவ வீரனும், ஒரு இளம் பெண்ணும் காதலித்துத் திருமணம் செய்து கொள்கிறார்கள்.

மூன்றே மாதத்தில் போர் ஏற்பட இராணுவ வீரன் போருக்குப் போக வேண்டியதாகி விடுகின்றது.

அவன் போகும் போது மனைவி கர்ப்பிணி இருவருமே மிகுந்த மன வருத்தத்தில் பிரிகிறார்கள்.

மகனை ஈன்றெடுத்த மனைவி, கணவன் உயிரோடு வீடு திரும்ப வேண்டும் என தினமும் பிரார்த்தனை செய்கிறாள்.

அதிர்ஷ்டவசமாக போரில் தப்பி பிழைத்த வீரன் மூன்றாண்டுகள் கழிந்து வெற்றிகரமாக வீடு திரும்புகிறான்.

அவன் கண்ணிலும், மனைவி கண்ணிலும் ஆனந்தக் கண்ணீர்

மூன்று வயது மகன் புரியாமல் விழிக்கிறான்.

கணவனுக்குப் பிடித்த சமையல் செய்ய சாமான்கள் வாங்கி வர மனைவி மார்க்கெட்டுக்குச் செல்ல வீட்டில் மகனும், தந்தையும் மட்டுமே இருக்கிறார்கள். கூச்சத்துடன் ஒதுங்கி நின்ற மகனைப் பார்த்து வீரன் கேட்கிறான். "அப்பாவுடன் ஏன் பேச மாட்டேன்கிறாய்?" அந்தச் சிறுவன் குழப்பத்துடன் தந்தையைப் பார்த்து விட்டு சொல்கிறான். "நீங்கள் ஒன்றும் என் அப்பா இல்லை" வீரன் மகனைக் கேட்கிறான். "பின் யார் அப்பா?" "தினமும் என் அம்மா நிற்கும் போது நிற்பார். அம்மா உட்காரும் போது அவரும் உட்கார்வார். படுக்கும் போது அவரும் கூடப் படுத்துக் கொள்வார். அவர் தான் என் அப்பா என்று அம்மா சொல்லியிருக்கிறாள்" வீரன் அதிர்ச்சியில் உறைந்து நின்றான்.

சாமான்கள் வாங்கி வந்த மனைவி கணவனிடம் திடீர் மாற்றத்தைக் கண்டாள். அவன், அவள் சமைத்ததை உண்ணவில்லை, அவளை அவன் தொடவில்லை, அவள் அவன் அருகில் வருவதைக் கூட அவன் மறுத்தான்.

இரண்டு நாட்கள் இப்படியே நிகழ மனைவி மனமுடைந்து தற்கொலை செய்து கொள்கிறாள். மனைவி இறந்த அன்று இரவு தந்தையும் மகனும் படுத்துக் கொள்ள

(தொடரும்...)



## 10 அடுத்தவர் காதலி பெயரை நாம் தினமும் சொல்கின்றோமே...



ஹலோ என்பது ஒரு பெண்ணின் பெயர். மார்கரெட் ஹலோ தான் அந்த பெண் .டெலிபோனை கண்டுபிடித்தாரே நம்ம கிரஹாம்பெல் அவருடைய காதலி தான் மார்கரெட் ஹலோ. அவர் போனை கண்டுபிடித்தவுடன் ஹலோ ஹலோன்னு அவர் காதலி பெயரை தான் சொன்னாராம்.

போனை கண்டுபிடித்த கிரஹாம்பெல்லை நாம் மறந்து இருந்தாலும் அவர் காதலி பெயரை ஞாபகம் வைத்து கொள்ளம்படி செய்துவிட்டார்.

அந்த காலத்திலேயே தன் காதலுக்கும் காதலிக்கும் மரியாதை செய்து இருக்கிறார்! ! ! !

## எனக்கு ரொம்ப பிடிக்கும்



எனது அம்மாவின் பெயர் திருமதி.முருகேசப்பிள்ளை சூரியமலர். அவர் நெடுங்கேணியில் 28.06.1969 அன்று பிறந்தார். எங்கள் அம்மா மிகவும் அன்பானவர், பொறுமையின் சிகரம் என்றால் எங்கள் அம்மா தான். தன்னை விட எங்களையும் அப்பா மேலும் ரொம்ப அக்கறையாக இருப்பாங்க அம்மாவைப் பார்த்து தான் நான் பொறுமையைக் கற்றுக்கொண்டேன். எங்கள் அம்மா ரொம்ப அழகானவர், அவரை எனக்கு ரொம்ப பிடிக்கும்.

**மு.முகுந்தினி**
மகாறம்பைக்குளம்,
வவுனியா.

இந்தப்பகுதியானது உங்களுக்கு மிகவும் பிடித்த நபரைப் பெருமைப் படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. நீங்கள் யாரை வேண்டுமானாலும் குறிப்பிடலாம் உதாரணமாக: அம்மா, அப்பா, கணவன், மனைவி, நண்பர்கள், காதலன் காதலி போன்ற யாரை வேண்டுமானாலும் இந்தப்பகுதியில் சேர்த்துக்கொள்ளலாம். நீங்கள் செய்யவேண்டியது நீங்கள் குறிப்பிடும் நபரின் புகைப்படம் மற்றும் அவரைப்பற்றி உங்களுடைய எண்ணங்களையும் கருத்துக்களையும் எழுதி எமது வழமையான முகவரிக்கு அனுப்பி வையுங்கள். "எனக்கு மிகவும் பிடித்த நபர்" பகுதியில் சேர்த்துக் கொள்வோம்.

மாதநிலா சஞ்சிகையை இலங்கையின் எப்பாகத்திலுமுள்ள அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

## ஆங்கிலச் சொல் தருக,


1. மின்விசிறி ..........................................
2. பாய் ..........................................
3. வைக்கோல் ..........................................
4. சீப்பு ..........................................
5. சாவி ..........................................
6. தேன் ..........................................
7. புகைவண்டி ..........................................
8. வானம் ..........................................
9. நிலம் ..........................................
10. பூ ..........................................

## இடைவெளியை கீழ் உள்ள சொற்களை வைத்து நிரப்புக

1. நானே பெரியவன் என்ற .................................................. விடுங்கள்.
2. உறவினர்களை சந்திக்கும்போது .................................................. பேசுங்கள்.
3. உங்கள் கருத்துக்களில் .................................................. இருக்காதீர்கள்.
4. .............................. நிறைந்த சமூகம் .............................. கட்டியெழுப்புவோம்
5. இயலாமையின் வெளிப்பாடே ..................................................

நன்மை, குறைகாணல், உடும்புப்பிடியாய், மனம் திறந்து, ஒன்றை, அகந்தையை,

## கீழே உள்ள படத்தைப் பார்த்து அருகில் உள்ள கட்டத்தில் வரைக.




"இம்மாத குட்டீஸ்" நீங்களா, அப்படியாயின் உங்களது வர்ண புகைப்படத்துடன் பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களையும் எங்களுக்கு அனுப்பி வையுங்கள், தெரிவு செய்யப்படும் புகைப்படம் இம்மாத குட்டீஸ் பகுதியாக அட்டையில் பிரசுரிக்கப்படும்.

**(தரம் 10 ற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்ற இயலாது)**


**இம்மாத குட்டீஸாக அட்டைபடத்தை அலங்கரிப்பவர்:**


**சி.பவிஜன்**

வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்.

# 12 விளையாட்டுச் சங்கதி




## இவர் மனசு யாருக்கும் வராது கோடிகளை கொடுத்து உதவிய ரொனால்டோ



ரியல்மாட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, நேபாள நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.50 கோடி நிதியுதவி அளித்துள்ளார்.

கடந்த மாதம் நேபாளத்தில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பலியாகினர். பலர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

ஏராளமான குழந்தைகள் பெற்றோர்களை இழந்து தவித்து வருகின்றனர். பல நாடுகளும் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவிகளை அளித்து வருகிறது.



இந்நிலையில் போர்த்துக்கல் அணியின் அணித்தலைவரான ரொனால்டோ, நேபாள நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 மில்லியன் பவுண்ஸ் அதாவது இலங்கை மதிப்பில் 150 கோடி ரூபாய் நிதியுதவியாக அளித்துள்ளார்.

இந்த தொகை "சேவ் தி சில்ட்ரன்" என்ற குழந்தைகள் நலனுக்காக செயல்பட்டு வரும் அமைப்பின் மூலம் போய்ச் சேரும்.

மேலும் தனது பேஸ்புக் பதிவில், நேபாள நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியுதவி வழங்குமாறு ரொனால்டோ கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து, அவரது ரசிகர்களும் நேபாள நாட்டுக்கு நிதியுதவி அளித்து வருகின்றனர்.

# கடலுக்கடியில் மைதானம்

துபாய்: உலகில் முதன் முதலாக கடலுக்கு அடியில் டென்னிஸ் மைதானம் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

உலகின் மிக உயரமான(650 அடி) டென்னிஸ் மைதானம் துபாயின் பர்ஜ் அல் அராப் ஓட்டலின் மேல் பகுதியில் அமைந்துள்ளது. இப்போது உலகின் ஆழமான டென்னிஸ் மைதானம், இந்த ஓட்டலுக்கு அருகில் அமையவுள்ளது.

இதற்காக, கடல் மட்டத்துக்கு அடியில் மிகப்பெரிய கண்ணாடி குடுவை போன்று அமைத்து, அதில் டென்னிஸ் மைதானம் அமைக்க முடிவு செய்துள்ளனர்.

போட்டி நடக்கும் போது பார்வையாளர்கள் கடலுக்கு அடியில் மற்றும் கடல் மட்டத்துக்கு மேல் இருந்தும் மீன்களை கண்டு களிக்கலாம். இதை போலந்து கட்டட கலை நிபுணர் கிரிஸ்டப் கோட்டாலா, 30, வடிவமைத்துள்ளார். இத்திட்டத்தை நிறைவேற்றத் தேவையான நிதி உதவியை, உள்ளூர் வீரர்கள் மற்றும் பல்வேறு நபர்களிடம் இருந்து கோட்டாலா எதிர்பார்த்துள்ளார்.

# மலிங்கா கேப்டனாக தெரிவு



11 ஆவது உலகக் கோப்பை போட்டிகளுக்கு பிறகு ஜெயசூர்யா தலைமையிலான கிரிக்கெட் வாரியம் கலைக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து வந்த தேர்வாளர்கள் புதிய கேப்டனை நியமிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில் இலங்கை கிரிக்கெட் அணியின் கேப்டனாக மேத்யூஸ் தொடர்ந்து நீடிக்கிறார். இவர் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளை வழிநடத்துவார். மேலும் 20 ஓவர் போட்டிகளை மலிங்கா வழிநடத்துவார் என இலங்கை கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது. வரும் பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடர் முதல் இங்கிலாந்து தொடர் வரை மேத்யூஸ் தொடர்ந்து கேப்டனாக வலம் வருவார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் துணை கேப்டனாக திரிமன்னே அறிவிக்கப்பட்டுள்ளார்.



# சித்தமருத்துவமும் மனித வாழ்வும்

சித்த மருத்துவ முறைகள் நடைமுறைப்படுத்துவதன் தேவையை இன்று அரசாங்கமும் மக்களும் மிக கூடுதலாக உணர்ந்துள்ளதுடன் அவற்றில் ஈடுபாட்டுடன் செயற்படுவதனையும் உலகெல்லாம் அவதானிக்க முடிகின்றது.

நமது சுற்றாடலில் நூற்றுக்கும் மேற்பட்ட அரிய சித்த மருத்துவ தாவரங்கள் உள்ளதை பலரும் அறிந்திருப்பதில்லை. அவற்றின் பயன்களும் பலன்களும் மிகப்பெறுமதி வாய்ந்தமையானது அதன் விபரங்கள் எதிர்வரும் காலங்களில் எழுதவுள்ளதுடன் கிராம பாடசாலை மட்டங்களில் அவற்றின் உற்பத்தி வளர்ச்சிக்கும் சில பணிகள் ஆற்ற திட்டங்கள் மூலம் செயற்படுத்தலாமென கருதுகிறேன். அதற்குமுன் எமது அயலில் தினம் கிடைக்கும் மருத்துவ மூலிகைப் பொருட்கள் என்ன இவற்றில் மூலம் எமக்கு என்ன பலன் கிடைக்கும் இவற்றை எவ்வாறு பயன்படுத்துவது சம்பந்தமாக ஆராய்வது நலமென்பதால் தொடர்ந்து "மாதநிலா" வில் அது வெளிவரவுள்ளது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு குறைபாட்டு விடயங்களும் காரணமான உணவு முறைகள் சம்பந்தமாகவும் என்னென்ன உயிர்சத்துள்ள உணவுகளை உண்பதன்மூலம் எந்தெந்த நோய்களைத் தவிர்க்க முடியும் என்பதையும் பார்க்கலாமென கருதுகிறேன். எதுஎவ்வாறு இருப்பினும் மக்கள் நலமென கருதும் இவ்விடயங்களில் ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன். இதன்மூலம் சித்த மருத்துவமும் அவற்றின் பயன்பாட்டு முறைகளும் மக்களைச் சென்றடைய அதிக வாய்ப்புள்ளது என்றும் குறிப்பிடத்தக்க சித்த மருத்துவத்தின் சிறிய வளர்ச்சியில் தேவைகளையும் மக்கள் உணரத்தொடங்கியுள்ளதால் இன்று உலகலாவிய பல்கலைக்கழகங்களிலும் குறிப்பாக இந்தியாவில் சிறப்பாகவும் சித்த மருத்துவ துறை மேலோங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

**இராஜ்மோகன் மனோராஜ்**
(யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவ 5ம் வருடம்)

(தொடரும்...)

# மூளைக்கு வேலை கொடுங்கள் 1

**மேலிருந்து கீழ்**

02.அடி, அங்குலம் இது (தலைகீழ்)

04.இது கொடுத்தால் நண்பனும் பகைவன் ஆவான்

05.மணப்பெண் அணிவது.

07.செல்லப்பிராணி (தலைகீழ்)

08.உருக்கி செய்வது (தலைகீழ்)

09.,இது பிறந்தால் நியாயம் பிறக்குமாம் (தலைகீழ்)

11.மாடு, குதிரை என்பவற்றுக்கு அடிப்பது

13.கிரகம்

14.திக்கு

15.விதியை இதனால் வெல்லாம்

16.இடையூறு

18.இன்னொருவர் குழந்தையை எடுத்து வளர்ப்பது (குழம்பியுள்ளது.)

19.நோய் (குழம்பியுள்ளது)

20.சாலை போட உதவுவது

**இடமிருந்து வலம்**

01.தயிரில் இருந்து கிடைப்பது

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | ■ | 3 | 4 | | ■ | 5 |
| ■ | 6 | 7 | ■ | | ■ | 8 | |
| 9 | ■ | 9 | 11 | | ■ | | ■ |
| 12 | | ■ | | ■ | 12 | | 14 |
| | ■ | 15 | | 16 | | ■ | |
| 17 | 18 | | ■ | | ■ | 18 | ■ |
| ■ | | ■ | 20 | ■ | ■ | 21 | |
| 22 | | | | | | | ■ |

03.இது கறுத்தால் மழை வரும்

06.தந்தம் உள்ள மிருகம்

08.தேய்ந்த நிலவு

10.இந்தியாவை கலக்கிய கொள்ளைக்காறி

12. இது படியாத கை என அரசியல் வாதிகள் கூறுவார்கள்

13.சேறு

15.அணுக்களால் ஆனது குளம்பியுள்ளது

17.சமயலறை ஆயுதம்

21.இதைப்போல் அண்ணன் தம்பி உதவாதாம்

22. இளைஞர் யுவதிகளின் நாள்

விடைகளை ஒரு வெள்ளைத் தாளில் எழுதி, எமது வழமையான முகவரிக்கு அனுப்பிவையுங்கள். முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 300/-, 200/-, 100/- வழங்கப்படும்

பிரதான அனுசரணையாளர்:

WES World • Express • Services

WORLD EXPRESS SERVICES
INTERNATIONAL LOCAL COURIER SERVICE

உலக நாடுகளுக்கு பொதி அனுப்பும் முதல்த்தர முன்னணி நிறுவனம்

இல:180/5, புகையிரத நிலைய வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா.
Tel: 024 4903 200 / 024 4928 455



அந்த பொலீஸ் கண் முன்னாடி அநியாயம் நடந்தா அவரு டூட்டில இல்லைனாகூட பார்த்திட்டு சும்மா இருக்கமாட்டாரு நிஜமாவா?

ஆமாம், போய் இலஞ்சம் கேட்பாரு




# உங்கள் பென்ரைவ் வேகமாக செயல்படவில்லையா?

பென்ரைவ் என்பது கணனி பயன்படுத்துவோர் மட்டுமல்லாமல், கிட்டத்தட்ட அனைவருமே பயன்படுத்தும் ஒரு Removable Device ஆகும். இத்தகைய பென்ரைவ்கள்(pendrives) நாம் கணினியில் பயன்படுத்தும்போது சில வேளைகளில் நம்முடைய பொறுமையைச் சோதிக்கும் அளவுக்கு மிகவும் மெதுவாக இயங்கும். அதிலுள்ள தரவுகளை பரிமாற்றம் செய்யும்போது நீண்ட நேரம் எடுத்துக்கொள்ளும். இத்தகைய சூழ்நிலையைத் தவிர்ப்பது எப்படி? உங்களுடைய பென்ரைவ் வேகமாகச் செயல்பட என்ன செய்ய வேண்டும் என்று பார்ப்போம்.

1.உங்கள் கணினியில் பென்ரைவை இணையுங்கள். (win+E) கொடுத்து MY COMPUTER செல்லவும்.

2.அங்கு பென்ரைவிற்கான டிரைவை வலது கிளிக் செய்து Properties என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

3.தொடர்ந்து திறக்கும் விண்டோவில் HARDWARE ஐ கிளிக் செய்யவும். பிறகு Name என்னும் தலைப்பின் கீழுள்ள உங்கள் பென்ரைவைத் தேரந்தெடுக்கவும்.

4.பிறகு கீழிருக்கும் Properties என்பதை கிளிக் செய்து Ok கொடுக்கவும்.

5.அடுத்து தோன்றும் விண்டோவில் change settings என்பதை கிளிக் செய்யவும்.

6.அதற்கு அடுத்துத் தோன்றும் பெட்டியில் Policies எனும் டேபிள் கிளிக் செய்து அதன் கீழிருக்கும் Better Performance என்பதைத் தேர்ந்தெடுத்து OK கொடுக்கவும்.

இப்போது உங்கள் பென்ரைவ் முன்பைக் காட்டிலும் வேகமாக இயங்கும். இதை நீங்கள் கண்கூடாக காண்பீர்கள். இந்த அனுபவம் எப்படி இருக்கிறது என்பதை கருத்துரையில் சொல்லுங்கள்.

மறக்காமல் ஒவ்வொரு முறையும் பென்ரைவை கணினியிலிருந்து நீக்கும்போது Safely remove hardware என்பதைக் கிளிக்செய்து பின்பு உங்கள் பென்ரைவை கணினியிலிருந்து நீக்கவும். இதை ஒரு தொடர் பழக்கமாக மாற்றிக்கொள்ளுங்கள். இதனால் உங்கள் பென்ரைவ் சேதமடையாமல் நீண்ட காலம் உழைக்கும்...!




டாக்டர் நல்லாயிருந்த பேஷண்ட்டுக்கு ஏன் ஆபரேஷன் பண்றீங்க?
முதலாம் திகதி உனக்கு சம்பளம் வேண்டாமா?


# Facebook இல் குழுவாக Chat செய்ய

Facebook சமூக இணையத்தில் வழமையாக குறிப்பிட்ட நேரத்தில் ஒரு நண்பருடன் மட்டமே சட் செய்யும் வசதி உள்ளதாக மட்டுமே நம்மில் பலரும் அறிந்திருக்கிறோம். ஆனால் ஒரே சமயத்தில் ஆன்லைனில் உள்ள நாம் விரும்பும் பல நண்பர்களை ஒரு குழுவாக சேர்த்து சட் செய்ய முடியும் என்பது நம்மில் சிலருக்கு தெரியாது. .


Facebook கணக்கில் நுழைந்து கொண்டு, ஆன்லைனில் இருக்கும் விரும்பிய நண்பர் ஒருவரை சாட்டில் க்ளிக் செய்யுங்கள்.




இப்பொழுது திறக்கும் சாட் பெட்டியில் வலது மேற்புறமுள்ள கியரை க்ளிக் செய்து Add Friends to Chat.. என்பதை க்ளிக் செய்யுங்கள்.




கீழே தோன்றும் பெட்டியில் நீங்கள் சட் குழுவில் இணைக்க விரும்பும் நண்பர்கள் பெயரை ஒவ்வொன்றாக டைப் செய்து தேர்வு செய்து கொள்ளுங்கள்.




அவ்வளவுதான் இனி இப்பொழுது உருவாக்கிய குழுவில் உள்ள நண்பர்களிடம் ஒரே சமயத்தில் சட் செய்திட முடியும்.



# பெண்கள் நேரம்

## சரும வறட்சியினைப் போக்கும் பால்-தயிர்

பால் உடலுக்கு எப்படி சக்தியைக் கொடுக்கிறதோ, அப்படியே நம் சரும அழகுக்கும் பால் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பால் சிறந்த சருமத்தை மென்மையாக வைத்திருக்கவும் பால் உதவும். ஆடை எடுக்கப்பட்ட பால் எல்லாவித சரும வகைக்கும் ஏற்றது. முகத்தில் பேக் போடும் பவுடருடன், பால் கலந்து உபயோகிக்கலாம். ஏடோடு இருக்கும் பால் உலர் சருமத்திற்கு ஏற்றதாகும்.

எண்ணெய் சருமத்திற்கு ஆடை எடுக்கப்பட்ட பால் அல்லது மோர் உபயோகிக்கலாம்.

சரும வறட்சி உள்ளவர்கள் பால் ஏடு எடுத்து தினமும் முகத்தில் தடவி உளர்ந்த பின் கழுவவும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் முகத்தில் உள்ள வறட்சி நீங்கி சருமம் பொலிவடைவதை காணலாம்.

கண்களின் அடியில் உள்ள கருவளையத்தைப் போக்க பாலாடை க்ரீம் பூசுவது நல்லது. (இது வெளியில் தனியாகக் கிடைக்கும்). தோலில் அடிக்கடி அரிப்பு ஏற்படுபவர்களுக்கு பால் மிகவும் நல்லது.

காய்ச்சாத பாலில் பஞ்சை நனைத்து, முகத்தில் பூசி சிறிது நேரத்தில் குளிர்ந்த நீரில் கழுவினால், முகம் பளிச்தான்.

எண்ணெய் வழியும் சருமத்திற்கு மோரில் பஞ்சை நனைத்து முகம், கழுத்தில் தடவி 10 அல்லது 15 நிமிடங்கள் ஊற வைத்துக் கழுவினால், முகம் பளிச்சென்று இருக்கும்.

## மேனியை சிவப் எப்படி மா

பெண்கள் சிவப்பான அழகைப் பெற கிரீம்களை தேட வேண்டியதில்லை. மருத்துவம்குணம் நிறைந்த குங்குமப்பூ இருந்தாலே போதும்.

குங்குமப்பூவை எப்படி பயன்படுத்தலாம்?

1. குங்குமப்பூவை உரசி ஒரு டேபிள் ஸ்பூன் தண்ணீர் விட்டு சிறிது நேரம் ஊற விடவும்.

2. குங்கும பூவின் நிறம் முழுக்க நீரில் ஊறியதும் சிறிது வெண்ணை கலந்து நன்றாக குழைக்கவும்.

3. இந்த கலவையை தினமும் பூசி வர உதடுகள் செவ்வாழை நிறம்பெறும். உதடுகளின் வறட்சி இருந்த இடம் தெரியாமல் ஓடி விடும். முகத்தில் உள்ள கரும்பு ள்ளிகளும் மறைந்து விடும்.

4. இந்த கலவையை நகங்கள் மீது பூசி வர நகங்களும் இயல்பான நிற ம் பெறும். நக சுத்தி வந்து அழுகிப் போன நகங்கள், உடைந்து போன நகங்கள் போன்றவற்றை குங்குமப்பூ வெண்ணை கலவையானது சீர் படுத்தி இழந்த அழகை மீட்டுத்தரும். முகத்திற்கு வசீகரத்தை தருவது கவர்ச்சி மிகு கண்கள்தான் அந்த கண்களுக்கு பளிச்

# பாக
# ற்றுவது?

அழகைத் தருவது அடர்த்தியான இமைகள் பட்டாம்பூச்சி போல் படபடக்கும் இமைகள் அமைய குங்குமப்பூ உதவுகிறது.

மேனியை சிவப்பாக எப்படி மாற்றுவது?

எந்தப் பூவிலும் இல்லாத புதுமை குங்குமப்பூவில் உண்டு. உடல் நிறத்தை சிவப்பாக மாற்றக் கூடிய அற்புதக் குணம் இதில் நிறைந்து காணப்படுகிறது.

குங்குமப்பூவை பொடியாக்கி வைத்துக் கொள்ளவும். அதில் தினமும் ஒரு சிட்டிகை அளவு எடுத்துக் கொள்ளவும். அதில் சில சொட்டுக்கள் பால் விட்டு கலந்து குழைத்துக் கொள்ளவும். இந்தக் கலவையை முகத்தில் பூசி வர முகத்தில் படர்ந்துள்ள கருமை நிறம் குறைவதை கண்கூடாகக் காணலாம்.

**பெண்களே! குங்குமப்பூவை பயன்படுத்தி அழகு சிலையாக அசத்த வாழ்த்துக்கள்.**



# அமைதி அழகானது

அமைதிக்கான தேவையும் நாட்டமும் உருவாக்கப்பட்டதல்ல இயற்கையாகவே அது ஒவ்வொரு மனிதனின் உள்ளேயும் இருக்கிறது.

ஒருநாளில் பல நிகழ்வுகள் நிகழ்கின்றன. துன்பகரமான செய்தி வந்தால் அது நமக்கு உண்மையானதாக இருக்கின்றது. நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்கள் இருந்தால் அதுவும் நமக்கு உண்மையானதாக இருக்கிறது. இவ்வுலகில் எப்பொழுதும் நிலைமாறிக்கொண்டிருக்கும் அனைத்து உண்மையான விஷயங்களுக்கிடையே நிலையாக இருக்கும் ஓர் உண்மை உள்ளது. அது என்னைப் பற்றியது அது என் உயிர் வாழ்வைப் பற்றியது. என்னைக் குறிப்பிடுவதற்கு எனக்கென்று ஒரு பெயர் உள்ளது. ஆனால் நான் யார்? நான் என்பது என்ன நான் அமைத்துக் கொண்டது போல் உண்மையிலேயே இந்த வாழ்க்கை சிக்கல் நிறைந்ததாக இருக்கிறதா? நல்லது கெட்டது என்ற இக்கட்டான சூழ்நிலைகளைக் கடந்து செல்லும் ஒரு மனிதன் தான் நானா? அல்லது நான் என்பது என்ன? அது சிக்கல் நிறைந்ததல்ல அது உண்மையிலேயே மிக உரிமையானது. எடை போடுதல்களோ அல்லது சுமைகளோ கிடையாது. ஆனால் எளிமையும் அழகும் நிறைந்த ஆனந்தத்தின் சமுத்திரம்.

அந்தவொரு தாகத்தோடு நிறைவு பெற வேண்டும். அமைதி பெற வேண்டும். ஆனந்தத்தில் இருக்கவேண்டும். புரிந்து கொள்ளவேண்டும்.

எவ்வாறு கண்டுகொள்வீர்கள்? சுவாசம் வந்துபோகும் இடத்தில்தான் அது இருக்கிறது.

வாழ்வு என்ற அன்பளிப்பைக் கொண்டு வருகிறது. மக்களிடம் இருக்கும் மிகப்பெரிய தவறான எண்ணம் என்னவென்றால் உள் அமைதியைக் கண்டு கொள்ள எல்லாவற்றையும் தியாகம் செய்ய வேண்டும் என்று நினைப்பதுதான். அது வெறும் சாக்குபோக்கு. இது பள்ளிக்குச் செல்ல மறுக்கும் மாணவர்களின் மன நிலையைப்போன்றிருக்கிறது. அவர்களின் சாக்குபோக்குகள் புத்திசாலித்தனமாகாது. நான் உண்மையிலேயே எதையும் தியாகம் செய்ய விரும்பவில்லை. ஆகவே அதை பற்றி மறந்துவிட வேண்டியது தான். நிறைவடைவதைப் பற்றியும் மறந்துவிட வேண்டியதுதான். என்று மக்கள் கூறுகிறார்கள். இது புத்திசாலித்தனமானது ஆனால் உண்மையல்ல எதையும் தியாகம் செய்யத்தேவையில்லை.

**—பிறேம் ராவத்**

இது மிகமிக எளிமையானது. இங்கே சாக்குபோக்குகள் கிடையாது. நமது சிரமங்கள், நமது பிரச்சினைகள், நமது வேலைகள் கொண்ட இந்த உலக வாழ்க்கைக்கு நடுவே நம்மால் நம் வாழ்வில் உள் அமைதியைப் பெற முடியும். காரணம் அந்த அமைதி ஏற்கனவே நம்முள் தான் இருக்கிறது. அதைத்தான் நான் வழங்குகின்றேன். அதைப்பற்றித்தான் நான் பேசுகின்றேன். அமைதி வேண்டுமென்று விரும்பும் ஒவ்வொருவருக்கும் அதை நான் சாத்தியப்படுத்த விரும்புகின்றேன். நாம் இதில் முழுமூச்சாக ஈடுபடவேண்டும். இதைவிட எது வேடிக்கையானதோ

(தொடரும்...)



# காதுக்குள் பூச்சி நுழைந்தால் எடுப்பது எப்படி?

காதினுள் உயிருள்ள பூச்சி சென்றுவிட்டால், முதலில் அப்பூச்சியை சாகடிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். உடனடியாக காதினுள் எண்ணையையோ உப்புக் கரைசலையோ காது நிரம்ப ஊற்ற வேண்டும் காதினுள் சென்ற பூச்சியின் மூச்சு தடைப் பட்டு பூச்சி உடனடியாக இறந்து விடும். அல்லது பூச்சி மிதந்து மிதந்து வெளியே வந்து விடும்.தண்ணீரை மட்டும் காதினுள் ஊற்றுவது நல்லதல்ல. ஏனெனில் தண்ணீரிலும் பூச்சி வாழ்வதற்குத் தேவையான பிராண வாயு உண்டு. ஆகவே பூச்சி அதிகத் துடிப்போடு கடிக்க ஆரம்பிக்கும்.

பூச்சி வெளியே தெரிந்தாலும், பூச்சியின் காலையோ உடம்பையோ பிடித்து இழுக்கக் கூடாது. ஏனென்றால் கடித்துக் கொண்டிருக்கும் பூச்சி அதிவேகமாகக் கடித்துக் கொண்டிருக்குமே தவிர விடாது. இன்னும் வேகமாக உடம்பைப் பிடித்து இழுத்தால் , பூச்சியின் உடம்புதான் தலையிலிருந்து துண்டிக்கப்பட்டு வெளியே வரும். அல்லது பூச்சி கடித்திருக்கும் செவிப் பறையும் கிழிந்து பூச்சியின் வாயோடு வெளியே வந்து விடும்.

ஆகவேதான் பூச்சியை முதலில் சாகடித்து விட வேண்டும். பிறகு அப்புறப்படுத்த வேண்டும். சிறு குழந்தைகளுக்கு மட்டுமின்றி பெரியவர்களுக்கும் இந்தப் பிரச்சினை ஏற்படுவதுண்டு. ஜாக்கிரதையாகக் கையாளா விட்டால் ஆபரேஷன் வரை போய் முடியும். எனவே எச்சரிக்கையுடன் மேற்சொன்னவாறு செயல்படவும்.



ஏங்க நாம ரெண்டு பேரும் நீயா நானா என்ற போட்டியில கலந்துக்கலாமா? அப்படின்னா அந்த நிகழ்ச்சியோட பேரை "பேயா நானா" என்றுதான் மாத்த வேண்டியிருக்கும்

# திருக்கேதீஸ்வரம்
## -ஓர் பார்வை

புராதன இலங்கையின் சிறப்பு வாய்ந்த ஐந்து ஈஸ்வரங்கள் என அன்புடன் அழைக்கப்படும் ஐந்து சிவன் திருக்கோயில்களுள் திருக்கேதீஸ்வரம் ஒன்றாகும்.


திருக்கேதீஸ்வரம் இத் திருக்கோயில் புராண, மற்றும் இதிகாச காலத்து வரலாற்று முக்கியத்துவத்தைக் கொண்டது. இந்து சமயத்தின் உலக மகா இதிகாசமான இராமாயணம் மற்றும் முருகப் பெருமானின் பெருமைகளையும், வரலாற்றுச் சிறப்புகளையும் கூறும் 'ஸ்கந்த புராணம்' தமிழில் 'கந்த புராணம்' -என்ற புராண நூலிலும் இலங்கைத் தீவின் அழகும், அத்தீவில் நிலவிய சிவ வழிபாடும், மக்களின் வாழ்க்கை முறைகளும் சிறந்த முறையில் எடுத்தியம்பப்படுகின்றன.

இராமாயணக் கதை இலங்கைத் தீவு பற்றிக் குறிப்பிடும் உண்மைகளைப் பார்ப்போம்: திருக்கேதீஸ்வரத் திருக்கோயில் இராமாயண காவியத்திலேயே சிறந்த முறையில் குறிப்பிடப்படுகின்றது.

இராவணனின் மனைவியர் பலர். அவர்களுள், பேரழகு மிக்கவளும் , பட்டத்து ராணியாக விளங்கியவளுமான மண்டோதரி சிறந்த கற்புக்கரசி. இவள் மயன் என்ற சிற்றரசனின் மகள். மயன் ஆட்சி செய்த இடத்தின் பெயர் மாதோட்டம் என்ற மாந்தை.

மண்டோதரி சிறந்த சிவபக்தை என்பதும், அவள் மாதோட்டத்தில் இருந்த திருக்கேதீஸ்வரத் திருக்கோயிலில் சிவபெருமானை வழிபாடு செய்ததையும் பண்டைய இதிகாசங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

திருக்கேதீஸ்வரத் திருக்கோயிலில் பிருகு என்ற மகாமுனிவர் சிவபெருமானை வழிபட்டதை 'மகா முனிவர்கள் வரலாறு' நமக்கு எடுத்துரைக்கின்றது.



நவக்கிரகங்களில் ஒருவரான கேது பகவான் இத் திருக்கோயிலில் சிவபெருமானை வழிபட்டுத் தமது சாபம் நீங்கப்பெற்றார் என்று 'தக்ஷிண கைலாச மான்மியம்' என்ற பண்டைய வரலாற்று நூல் கூறுகின்றது. கேது பகவான் பக்தியுடன் பூசித்ததாலேயே இத் திருக்கோயிலுக்குத் 'திருக்கேதீஸ்வரம்' என்னும் பெயர் உண்டாயிற்று.

திருக்கேதீஸ்வரம் இந்து மதத்தின் மிகப் பெரிய புராண நூலான 'ஸ்கந்த புராணத்தில் (இது முருகப்பெருமானின் வரலாற்றுச் சிறப்புகளைக் கூறும் நூல் என்பது உங்களுக்குத் தெரியும். மேலும், முருகப்பெருமான் குற வள்ளியைத் திருமணம் செய்த திருத்தலம் இலங்கையிலுள்ள கதிர்காமம்தான் என்பதும் ஒரு கர்ண பரம்பரைக் கூற்று.)

மூன்று அத்தியாயங்களில் இலங்கையைப் பற்றியும், அத்தீவின் அழகைப் பற்றியும் அங்கே வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறைகளையும் பற்றி விளக்கிவிட்டு, இலங்கையின் முக்கியமான இரண்டு புராதனமான சிவன் திருக்கோயில்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகியவற்றின் தோற்றத்தைப் பற்றி நமக்கு எடுத்துரைக்கின்றது.



அப் புராணத்தின்படி, முன்னொரு காலத்தில், வாயுதேவனுக்கும், ஆதிசேடனுக்கும் யுத்தம் மூண்டபோது, ஆதிசேடனைத் தாக்குவதற்காக வாயுதேவன் மகா மேரு மலையின் சிகரங்களில் மூன்றை எடுத்து வீசினார். அந்தச் சிகரங்களில் இரண்டு இலங்கைத் தீவில் வீழ்ந்தன. ஒன்று திருக்கேதீஸ்வரமாகியது.

மற்றொன்று, திருக்கோணேஸ்வரமாகியது. மகா மேரு மலை இறைவன் உறையும் புனிதமான மலையாகையால், சிவபெருமான் இத் திருத்தலங்களையும் தமது உறைவிடங்களாக்கிக் கொண்டார். ஆகையால், மகா மேரு மலையின் புனிதத்துவமும், பெருமையும் திருக்கேதீஸ்வரத் தலத்துக்கும் உள்ளது.

இந்த வரலாற்றுச் சிறப்புகள் 'தக்ஷிண கைலாச மான்மியம்' என்ற பண்டைய தமிழ் வரலாற்று நூலிலும் விளக்கப்பட்டுள்ளது.

புராண காலத்தைக் கடந்து வரும்போது, அடுத்ததாக, சைவ சமயத்தின் சமய குரவர்களான திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் ஏழாம் நூற்றாண்டிலும், சுந்தர மூர்த்தி நாயனார் எட்டாம் நூற்றாண்டிலும் இந்தத் திருக்கோயிலுக்கு வருகை தந்து இத் திருக்கோயிலில் உறையும் திருக்கேதீஸ்வரரின் சிறப்பைப் பற்றியும், அதன் அருகே அமைந்துள்ள புனிதமான பாலாவித் தீர்த்தத்தின் மகிமைகளைப் பற்றியும் தமது தேவாரங்களில் பாடியுள்ளார்கள்.

இந்தியாவிலும், இலங்கையிலும்

(தொடரும்...)

# எறும்பு தின்னுது

சரவணனுக்கு பணம்தான் குறி. கஷ்டப்படுபவர்களுக்குப் பணம் தேவை என்றால் சரவணனிடம் தான் ஓடி வர வேண்டும். அதுவும் சும்மா ஓடி வந்தால், அவன் பணம் கொடுக்க மாட்டான். பண்ட பாத்திரமோ, நகையோ கொண்டு வந்தால்தான் பணம் கொடுப்பான். அதுவும், பாதி விலைக்குத்தான் வாங்குவான்.

கடவுள் அவன் பக்கம் இருந்து, எல்லா மக்களுக்கும் கஷ்டத்தைக் கொடுத்து, அவனுக்கு லாபத்தை வாரிக் கொடுத்தார்.

"இதெல்லாம் ரொம்பப் பாவம். நம் மகனுக்குப் பாவத்தைச் சேர்த்து வைக்காதீர்கள்," என்று அவன் மனைவி கமலா கண்டிப்பாள்.

""போடி, போடி பிழைக்கத் தெரியாதவளே, பணம்தான் உலகம்... பணம் இல்லை என்றால் ஒருவனும் நம்மை மதிக்க மாட்டான்,"" என்று அவளைக் கிண்டல் செய்வான் சரவணன்.

ஒருநாள் புதிய ஆள் ஒருவன் சரவணனிடம் வந்தான்.

""என் மனைவிக்கு ஒரு பெரிய ஆபரேசன் செய்ய வேண்டும். அதற்குப் பணம் தேவைப்படுகிறது என்னிடம் உள்ள நகைகளை வாங்கிக் கொள்கிறீர்களா?"" என்று கேட்டான்.

""அவனைப் பார்த்தால், திருட்டுப் பயல் போல இருக்கிறது. ஒரு மூட்டை நகை கொண்டு வந்து இருக்கிறான். நிச்சயமாக எங்காவது திருடிக் கொண்டு வந்திருப்பான். அவனைப் போகச் சொல்லுங்கள் வீண் வம்பு வேண்டாம்,"" என்றாள்.

ஆனால், நகையைக் கண்டதும் பேராசையும் பொங்கியது சரவணனுக்கு. இவ்வளவு நகை எங்கே கிடைக்கும்? என்று நினைத்து யோசிக்க மறந்தான்.

""கமலா! நீ இந்த விஷயத்தில்



தலை இடாதே... உனக்கு என்ன தெரியும்!"" என்று அவளைத் திட்டி அனுப்பி விட்டு, மூட்டையுடன் வந்த ஆளை உள்ளே அழைத்தான்.

அந்த ஆள் மூட்டையைப் பிரித்தான். ஏராளமான தங்க நகைகள் மின்னின. எல்லாமே சுத்தத் தங்கம். லட்ச ரூபாய்க்கு மேல் பெறும்.

""பத்தாயிர ரூபாய் தான் கொடுப்பேன். இஷ்டம் இருந்தால் கொடு. இல்லாவிட்டால் போ,"" என்று கண்டிப்பாகப் பேசினான்.

## சிறுகதை

""சரி ஐயா பணத்தைக் கொடுங்கள்,"" என்று அழுது வடிந்தான் அந்த ஆள்.

உடனே, பணத்தைக் கொடுத்து, நகைகளை வாங்கி பீரோவில் வைத்துப் பூட்டினான் சரவணன்.



மனம் முழுவதும் சந்தோஷம் இப்படி ஒரு அதிர்ஷ்டம் யாருக்கு அடிக்கும். லட்சரூபாய் பெறுமானமுள்ள நகையை பத்தாயிரத்திற்கு. சுருட்டிய தன்னுடைய திறமையை எண்ணி மகிழ்ந்தான்.

ஒருமாதம் சென்றது–

சரவணன் வீட்டு வாசலில் போலீஸ் ஜீப் ஒன்று வந்து நின்றது. அதில் இருந்து இன்ஸ்பெக்டரும், காவலர்களும் கையில் விலங்கு பூட்டிய ஒருவனோடு கீழே இறங்கினார்கள். கையில் விலங்குடன் காணப்பட்டவன் ஒரு மாதத்திற்கு முன்னால் சரவணனிடம் நகைகளை விற்ற ஆசாமி.

சரவணன் பயத்துடன் வாசலுக்கு வந்தான்.

""இவர்தான் என் திருட்டு நகைகளை வாங்கியவர்,"" என்று சரவணனை அடையாளம் காட்டினான் திருடன்.

அவ்வளவுதான்! இன்ஸ்பெக்டரும், காவலர்களும் சரவணனின் வீட்டுக்குள் புகுந்து, அலமாரியைத் திறந்து திருட்டு நகைகளோடு மற்ற நகைகளையும் சேர்த்து எடுத்துக் கொண்டு, சரவணனை ஜீப்பில் அள்ளிப் போட்டுக் கொண்டு போனார்கள்.

கடவுள் சரவணனுக்கு உதவி செய்வது போல அவனை செழிக்க வைத்து, கடைசியில் பழி வாங்கி விட்டார். ஏழைகளின் வயிற்றெரிச்சல் சும்மா விடுமா?

# தாய்நாட்டுக் கலைஞர்

## எழுத்தாளர் தம்பலகாமம் க.வேலாயுதம்



ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு மேலாக வீரகேசரியில் தம்பலகாமம் பகுதி நிருபராகவும் அவர் சிறப்பாகக் கடமையாற்றினார். செய்திகளைச் சுடச் சுடத் தெரிவிப்பதில் அவர் அசகாய சூரனாக விளங்கினார். அவர் நிருபராகக் கடமையாற்றிய காலத்தில் தம்பலகாமச் செய்திகளுக்கு ஒரு தனி மதிப்பு இருந்தது. வெறுமனே செய்திகளை மட்டும் எழுதாமல், கிராமத்தின் அத்தியாவசிய தேவைகளையும் அவற்றை எவ்வாறு தீர்க்கலாம் என்பதற்குரிய வழிவகைகளையும் கட்டுரைகள் மூலமாக தமிழ் கூறும் உலகிற்கு எடுத்துரைத்தார்.


தம்பலகாமம் மக்கள் அகதிகளாக சூரங்கல், கிண்ணியா போன்ற இடங்களில் அவலமாக வாழ்ந்த போது அதை வெளிச்சம் போட்டு வெளியுலகிற்குக் காட்டி உடனடியாக நிவாரணம் கிடைக்க வழி செய்தார். தம்பலகாமம் பொது வைத்தியசாலையில் இந்திய அமைதிகாக்கும்படை முகாம் அமைத்திருந்த போது அதை எதிர்த்து எழுதி, அங்கிருந்த முகாமை உடன் அகற்றி ஆவன செய்தார். தொலைபேசி இணைப்பு தம்பலகாமத்திற்கு விரைந்து கிடைப்பதற்கும் இவரது எழுத்தே காரணமாக அமைந்தது. இவ்வாறு சமூக நோக்கோடு அவர் செயற்பட்ட காரணத்தால், இலங்கை இராணுவ விசாரணை ஒன்றிற்கும் முகம் இதற்கான சன்மானத்தை இவ்விதழின் இலங்கை ஏஜன்சி மூலம் இவருக்குக் கிடைக்கும்படி அனுப்பிவைத்தார்கள். அந்தக் கதை சொல்லும் செயலும் என்பதாகும். அதுமட்டுமன்றி குமுதம் பக்தி இதழ் இவர் அனுப்பிவைத்த ஆதிகோணேசர் ஆலயத் திருவுருவை அழகிய முறையில் அதன் அட்டையில் பிரசுரித்து வெளியிட்டுள்ளது. இவரது ஆடகசௌந்தரி என்ற கட்டுரையையும் குமுதம் வெளியிட்டுள்ளது.

திரு கரிகாலன் அவர்கள் ஆசிரியராக இருந்த காலச்சுடர் தூய உருவில் உத்தமிகள், சண்டியன் கதிராமர் போன்ற கதைகளையும், போட்டிக் கவிதைகளையும் பிரசுரித்திருந்தது. "ஆத்ம ஜோதி" என்ற இதழில் இவரது உத்தமி என்ற கதையும், ஆன்மீகக் கட்டுரைகளும் வெளிவந்தன. இவரது "பேய்கள் ஆடிய இராமாயணம்" என்ற கதையை சிந்தாமணி படங்களுடன் வெளியிட்டிருந்தது. ஒரு பேயை நேருக்கு நேர் கண்டவரால், பேயின் கோரமுகத்தை விபரிக்கமுடியவில்லை என்ற கதை, வீரகேசரியில் படங்களுடன் வெளிவந்த போது, உள்ளூர் வாசகர் மட்டுமன்றி, வெளியூர் வாசகர்களும் இது உண்மையான கதையென்றே நம்பினர். சிலர் இவரைச் சந்திக்கும் போதெல்லாம் அந்தக்கதையில் வந்த பாத்திரமான "மாட்டுக்கார மாணிக்கம்" இப்போதும் உயிருடன் இருக்கின்றானா? என்று வினாவியும் உள்ளார்கள்.

எழுத்துத் துறையில், என்று கால்பதித்தாரோ, அன்றில் இருந்து இன்றுவரை, தொடர்ந்து எழுதிக் கொண்டிருப்பவர் தம்பலகாமம் க.வேலாயுதம் அவர்கள்.

# இலங்கையின் கணினி மேதை

## வி.கே.சமரநாயக்க



"வித்யா ஜோதி" பேராசிரியர் வீ.கே.சமரநாயக்க B.Sc (Ceyl), D.I.C., Ph.D.(Lond), D.Sc.(Colombo), MBCS, MCS(SL), FNASSL, MIEEE (1939 - ஜூன் 6, 2007) இலங்கையில் கணனி மற்றும் தகவல் தொடர்பாடல் துறையின் வளர்ச்சிக்கு வித்திட்டவர். இதனால் தான் இவர் "இலங்கையின் கணனித் துறையின் தந்தை" என அழைக்கப்படுகின்றார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாக கடமையாற்றிய பேராசிரியர் வீ.கே.சமரநாயக்க ஒரு கணனி விஞ்ஞானப் பேராசிரியர் ஆவார். இலங்கையின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த கல்வி என்பவற்றின் வளர்ச்சியில் பேராசிரியர் வீ.கே.சமரநாயக்க ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. பேராசிரியர் வீ.கே.சமரநாயக்க உருவாக்கிய கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கல்லூரி (UCSC) இன்று இலங்கையின் பிரதான கணனிக் கற்கை நிலையமாக விளங்குகின்றது. பேராசிரியர் வீ.கே.சமரநாயக்க அவர்கள் இறக்கும் போது இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்தின் தலைவராக இருந்தார்.

### ஆரம்பக் கல்வியும் குடும்ப வாழ்க்கையும்

திரு திருமதி V.W சமரநாயக்க தம்பதிகளின் புதல்வரான பேராசிரியர் சமரநாயக்க தனது இடைநிலைக் கல்வியினை கொழும்பு றோயல் கல்லூரியிலும் உயர் கல்வியினை இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் பயின்றார்.

### வாழ்க்கை

1961ம் ஆண்டு முதல் பேராசிரியர் சமரநாயக்க அவர்கள் தான் பட்டப்படிப்பினை மேற்கொண்ட கொழும்பு பல்கலைக் கழகத்திலேயே பணிபுரிய ஆரம்பித்தார். தொடர்ச்சியாக 43 வருடங்கள் பேராசிரியர் அவர்கள் அங்கு பணிபுரிந்தார். (இக் காலகட்டத்தில் 1974ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகம் கொழும்பு பல்கலைக் கழகமாக மாற்றம் கண்டது.) 43 வருட காலப் பகுதியில் விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாகவும் கணனிக் கல்லூரியின் நிறுவுனராகவும் இதன் இயக்குனராகவும் பணி புரிந்தார்.

### விருதுகள்

இலங்கை அரசு 1997ம் ஆண்டு பேராசிரியர் சமரநாயக்க அவர்களுக்கு "வித்யா பிரசாதினி" விருதையும் 1998ம் ஆண்டு "வித்யா ஜோதி" விருதினையும் வழங்கியது. ஜப்பான் சர்வதேச கூட்டுறவு மையம் (JICA) 1996ம் ஆண்டு சர்வதேச கூட்டுறவுக்கான தலைவர் விருதினை வழங்கியது. கொழும்பு பல்கலைக்கழகம் 2005ம் ஆண்டு கலாநிதிப் பட்டத்தினை வழங்கியது.

**பிறப்பு: 1939 கொழும்பு, இலங்கை**
**இறப்பு: ஜூன் 6, 2007 சுவீடன்**
**பணி: கணினித்துறைப் பேராசிரியர்**
**வாழ்க்கைத் துணை: சிறியா சமரநாயக்க**

# விஜய் உதவி!

விஜய் சினிமாவில் மட்டும் ஹீரோவாக இல்லாமல் நிஜ வாழ்க்கையிலும் பலருக்கு உதவிகள் செய்து ஹீரோவாக மக்கள் மனதில் பதிந்துள்ளார். தனது விஜய் மக்கள் இயக்கம் சார்பில் ஏழை குழந்தைகளின் படிப்பு செலவு, மாணவ, மாணவிகளுக்கு இலவச புத்தகங்கள், இலவச கம்யூட்டர் பயிற்சி மையங்கள் என பல்வேறு உதவிகளை செய்து வருகிறார்.

இந்நிலையில், விஜய், கடந்த மாதம் நிலநடுக்கத்தால் உருக்குலைந்து போன நேபாள மக்களுக்கு ரூ.10 லட்சம் மதிப்பிலான மருந்து மற்றும் துணிமணிகளை தனது விஜய் மக்கள் இயக்கம் சார்பில் அனுப்ப முடிவு செய்தார்.

அதன்படி விஜய் ரசிகர் மன்ற நிர்வாகிகளின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான இந்த பொருட்கள் அனைத்தும் இன்று நேபாளத்துக்கு அனுப்பப்பட்டது.

கஷ்டப்படுபவர்களுக்கு உதவிடும் வகையில் விஜய் மற்றும் அவரது ரசிகர்கள் செய்துள்ள இந்த மனிதாபிமான நற்பணிக்கு சமூக வலைத்தளங்களில் வாழ்த்துக்கள் குவிந்தவண்ணம் உள்ளன.





# சி

பின் நஸ்ரியா சினிமா

பஹத் பாசில் மலையா
இருக்கிறார். இவரும் ஆ
மலையாள படத்தில் ஜே

இப்படம் கேரளாவில் ரிலீச
படத்தில் ரசூல் என்ற கேரக்ட
காதலிக்கும் காதலியாக ஆண்ட்

சமீபத்தில் ஆண்ட்ரியாவிடம் உங்க
போது ரசூல் கேரக்டரை போல் ஒரு
செய்து கொள்வேன் என்று பதில் அ

பஹத் பாசிலை போல் கணவர் வே
இப்படி அவர் சொன்னதாக மலை
கிசுக்கின்றனர். இதன் மூல
ஆண்ட்ரியாவுக்கு நெ
சமூக வலை தள
உள்ளன. இது
ஏற்படுத்தி

# நஸ்ரியா கணவருடன் ஆண்ட்ரியா கிசு கிசு!



நஸ்ரியா தமிழில் நேரம், ராஜாராணி, நய்யாண்டி, திருமணம் எனும் நிக்கா உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். இவருக்கும் மலையாள நடிகர் பஹத் பாசிலுக்கும் கடந்த வருடம் திருமணம் நடந்தது. திருமணத்துக்கு

ஸ்ரியா சினிமாவில் நடிக்கவில்லை.

சில் மலையாளத்தில் தற்போது முன்னணி நடிகராக ர். இவரும் ஆண்ட்ரியாவும் 'அன்னயும் ரசூலும்' என்ற படத்தில் ஜோடியாக நடித்துள்ளனர்.

ளாவில் ரிலீசாகி வெற்றிகரமாக ஓடியது. இந்த என்ற கேரக்டரில் நடித்த பஹத் பாசிலை உருகி உருகி லியாக ஆண்ட்ரியா நடித்து இருந்தார்.

ாவிடம் உங்கள் திருமணம் எப்போது என்று கேட்ட ர போல் ஒருவர் கிடைத்தால் உடனடியாக திருமணம் ன்று பதில் அளித்தார்.

கணவர் வேண்டும் என்பதை தான் மறைமுகமாக ன்னதாக மலையாள பட உலகினர் கிசு ர். இதன் மூலம் பஹத் பாசிலுடன் ரியாவுக்கு நெருக்கம் ஏற்பட்டுள்ளதாக க வலை தளங்களில் செய்திகள் பரவி உள்ளன. இது நஸ்ரியாவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது



# 30 எனக்குப் பிடித்த பாடல்

| | |
|---|---|
| படம் | : டூயட் |
| இசை | : ஏ.ஆர்.ரஹ்மான் |
| பாடலாசிரியர் | : வைரமுத்து |
| பாடியவர் | : எஸ்.பி.பி, சித்ரா |



## அஞ்சலி அஞ்சலி புஸ்பாஞ்சலி...

அஞ்சலி அஞ்சலி புஷ்பாஞ்சலி
பூவே உன் பாதத்தில் புஷ்பாஞ்சலி
பொன்னே உன் பெயருக்கு பொன்னாஞ்சலி
கண்ணே உன் குரலுக்கு கீதாஞ்சலி
கண் காணா அழகிற்கு கவிதாஞ்சலி
(அஞ்சலி)

காதல் வந்து தீண்டும் வரை இருவரும்
தனித்தனி
காதலின் பொன் சங்கிலி இணைத்தது
கண்மணி
கடலிலே மழைவீழ்ந்தபின் எந்தத்துளி
மழைத்துளி
காதலில் அதுபோல நான் கலந்திட்டேன்
காதலி
திருமகள் திருப்பாதம் பிடித்துவிட்டேன்
தினமொரு புதுப்பாடல் படித்துவிட்டேன்
அஞ்சலி அஞ்சலி என்னுயிர்க் காதலி
(பூவே)

சீதையின் காதல் அன்று விழி வழி
நுழைந்தது
கோதையின் காதலின்று செவி வழி புகுந்தது
என்னவோ என் நெஞ்சிலே இசை வந்து
துளைத்தது
இசை வந்த பாதை வழி தமிழ் மெல்ல
நுழைந்தது
இசை வந்த திசை பார்த்து மனம்
குழைந்தேன்
தமிழ் வந்த திசை பார்த்து உயிர் கசிந்தேன்
அஞ்சலி அஞ்சலி இவள் தலைக்காதலி
பூவே உன் பாதத்தில் புஷ்பாஞ்சலி
பொன்னே உன் பெயருக்கு பொன்னாஞ்சலி
கண்ணே உன் குரல் வாழ கீதாஞ்சலி
கவியே உன் தமிழ் வாழ கவிதாஞ்சலி
(அஞ்சலி)

அழகியே உனைப்போலவே அதிசயம்
இல்லையே
அஞ்சலி பேரைச்சொன்னேன் அவிழ்ந்தது
முல்லையே
கார்த்திகை மாதம் போனால் கடும்மழை
இல்லையே
கண்மணி நீயில்லையேல் கவிதைகள்
இல்லையே
நீயென்ன நிலவோடு பிறந்தவளா?
பூவுக்குள் கருவாகி மலர்ந்தவளா?
அஞ்சலி அஞ்சலி என்னுயிர்க்காதலி...
(பூவே...)

இடைக்கால பாடல் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும் அதிலும் இந்தப்பாடல் பாடலின் இசை என்னை மிகவும் கவர்ந்திருக்கிறது. எனது காதலிக்காக இந்தப்பாடலை விரும்பிக் கேட்கின்றேன். பிரசுரிப்பீர்களா?

**நி.நிஷாந்**
செட்டிகுளம், வவுனியா

# மதம்

இராஜ்மோகன சர்மா
வவுனியா

மதம் (சமயம்) இதை மனிதர்களை மனிதர்களாக அதனைவிட ஒருபடி மேலாக மகான்களாகவும் ஞானிகளாகவும், மனிதர்கள் வணங்கும்படியான செயல்களை செய்பவர்களாக ஆக்குவதற்கான ஒரு வழியாகி ஆதிகாலத்திலிருந்து ஆனால் இன்று பல வழிகளிலும் மதம் கேள்விக்குள்ளாகி வருவது கண்கூடு. திறந்த பொருளாதார சந்தையமைப்பு முறை வணிகமயமாக்கல் உலகமயமாக்கல் கொள்கைகள் காரணமாக சகலவிடயங்களும் அதனுள்ளடக்கப்படுகின்றது. இதுவே இன்றைய யதார்த்த நிலையாகும் அண்மையில் வடமாகாண சர்வமத பேரவைக் கூட்டமொன்றிலே கலந்துகொண்டபோது மதம் சம்பந்தமான பல கருத்துக்களைப் பரிமாரிக்கொள்ளக்கூடியதாக இருந்தது. அதன்போது கவிஞர் வைரமுத்துவின் ஒரு சில வரிகள் வாசித்த ஞாபகத்தில் எழுந்த சிந்தனையை இங்கே தருகின்றேன்

**மனிதர்களில் மதம்**

அன்பான மனிதர்களே
யானையைத் தவிர மதம் பிடித்த மற்ற
விலங்கெதனையும்
நீங்கள் கண்டதுண்டா?
ஆனால் மனிதர்களை
ஒப்பிட்டுப் பேசும்போது
கிறிஸ்தவ கிளி
இந்துப்புலி
மொகம்மதிய மான்
பௌத்தச்சிங்கம்
சமனக்கொக்கு
பறங்கிய பசு
இப்படி எத்தனையெத்தனையோ

அன்பான மனிதர்களே..!
அடர்ந்த காட்டுக்குள்
இவற்றை நீங்கள் பார்த்ததுண்டா?
அல்லது அவற்றை அடையாளம் தான்
காட்டமுடியுமா?
ஐந்தறிவு படைத்த அவைகள்
அன்பாய் வாழும்போது... நாம்?

அன்பான மனிதர்களே...
விலங்குகளையும் பறவைகளையும்
பாம்புகளையும் சிரம்தாழ்த்தி
வணங்குகிறார்களே அதுவும் நிஜமானதே
மனிதர்கள் வணங்கும்படி
சில பறவைகளும்
விலங்குகளும்
பாம்புகளும் உள்ளபோதும்
ஐந்தறிவு படைத்த அவைகள்
வணங்கும்படி
எங்காவது மனிதர்கள்
வாழ்கிறீர்களா?
தேடுகிறேன் தேடலே வாழ்க்கை
இறைவா! நீ எங்கிருக்கிறாய்
தேடுகிறேன் மனிதனாக நான்
எல்லா மதங்களும் என்று
ஒன்றுபட்டு ஓரிடத்தில் நின்று
மனிதர்களாக
வானத்தை நோக்கி
எல்லோருக்கும் மேலான இறைவனே
நாம் எல்லோரும் நல்லாயிருக்க
எம்மாலனவற்றை செய்கின்றோம்.
அனைவருக்கும் அருள்புரிவாயாக
என்று பிரார்த்திக்க முடிகிறதோ
அன்று தான்
சம் (மதம்) மனிதனை உருவாக்கும்.

# ஆட்டோவில் பயணம் செய்யும் பெண்களுக்கானது

இரவு நேரங்களில் தன்னந்தனியாக

பயணம் செய்ய நேர்ந்தால்.

உங்கள் கைபையில் மிளகாய் தூள்,பெப்பர் ஸ்பெரே, குண்டூசி இவைகளில் ஒன்றை மறக்காமல் எடுத்துகொள்ளுங்கள்.

ஏய் ஆட்டோ என்றோ நீ,வா,போ என்றோ ஓட்டுனரை அழைக்காதீர்கள்.

(இதனால் உங்கள் மீது வெறுப்பு ஏற்படலாம்).

அண்ணா, தம்பி என்றோ முடிந்தால் ஸார் என்றோ அழைக்கவும்.

(இதனால் உங்கள் மீது நல்ல அபிப்பிராயமும் உடன் பிறந்த சகோதரி என்ற எண்ணம் ஏற்படலாம்)

ஆட்டோவில் ஏறும் முன் நாம் போகும் இடத்தை தெளிவாக கூறி அதற்கான வாடகை பேசி கொள்ள வேண்டும்.

(இதனால் பிறகு வாடகை தகராறு ஏற்படாமல் தவிர்க்கலாம்).

நீங்கள் ஏறும் முன் ஆட்டோவின் பெயரையோ அல்லது பதிவு நம்பரையோ குறித்து வைத்துகொள்ளுங்கள்.

(இதனால் நாம் ஏதாவது பொருளை விட்டு சென்றால் பிறகு அந்த ஆட்டோவின் நம்பரை வைத்து கண்டு பிடித்துவிடலாம்)

ஆட்டோவில் ஏறிய பிறகு ஓட்டுனரின் காது கேட்கும் படி சத்தமாக உங்கள் உறவினருக்கோ (உறவினர் இல்லாத பட்சத்தில் சும்மா டயல் பன்னாமல்) போனில் "நான் இந்த பெயர் கொண்ட ஆட்டோவில் ஏறிவிட்டேன் இன்னும் குறிப்பிட்ட நேரத்தில் வந்துவிடுவேன்"என்று கூறவும்.

பயணம் செய்யும் போது ஓட்டுனரிடம் குழைந்தோ அல்லது தேவையற்ற விசயமோ அல்லது ஏதும் பேசாமல் இருப்பது நல்லது.

ஆட்டோவின் இரு ஓரங்களில் இருக்காமல் நடு பகுதியில் இருக்கவேண்டும்.

உங்கள் அரைகுறை ஆடையே உங்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் ஆதலால் ஆடைகள் ஒழுங்கான முறையில் உடுத்திகொள்ளுங்கள்.புடவை உடுத்திய பெண்கள் முந்தானையை சரிசெய்து காற்றில் பறக்காதவாறு கவனமாக இருக்கவேண்டும்.
(ஏனெனில் ஓட்டுனர் கண்ணாடி வழியாக பின்னால் வரும் வாகனத்தை பார்க்க முயற்சிக்கும் போது புடவை காற்றில் பறந்தால் அவரின் கவனம் திசைதிரும்பும் அதுவே மிக பெரிய பிரச்சினை ஆகிவிடும். நீங்கள் போய் சேரும்வரை உங்கள் கவனம் எப்போதும் ஓட்டுனரை நோக்கியே இருக்கவேண்டும்.அவரின் சிறு சிறு நடவடிக்கை கண்காணிக்க வேண்டும். முதல் தடவையாக போகும்போது நமக்கு அதன் வழி தெரியாது ஆதலால் செல்போன் எடுத்து நான் இந்த இடம் வந்தாகி விட்டது என்று ஓட்டுனரின் காதில் விழும்படி உறவினரிடம் பேச வேண்டும் அல்லது பேசுவது போல் பாவலா காட்டவேண்டும். நாம் போகும் வழி சரியாக தான் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.அவ்வாறு தவறான வழியில் போகிறது என்றால் பதட்டபடாமல் நிதானமாக ஏன் என்று காரணம் கேட்க வேண்டும்.ஓட்டுனர் கூறும் காரணம்(சாலை வேலை,சாலை மூடல்) சரியாக இருக்கும் என்று நம்பிக்கை வந்தாலோ அல்லது





வரா
விட்டாலோ
மறுபடியும் செல்போன்
எடுத்து இந்த ரூட் சரியில்லை
வேறு வழியாக வருகிறேன் என்று
உறவினருக்கு பேசுவதுபோல் பாவலா
காட்டவேண்டும்.

அதையும் மீறி தவறான பாதையில் போகிறது என்றால் எந்த காரணம் கொண்டும் பதட்டபடாமல் சமயோஜித புத்தியை கொண்டு சில வழிமுறையை கையாளவேண்டும்.

தங்கள் இருக்கையின் கீழ்தான் பெட்ரோல் திறக்க, மூட,ரிசர்வ் செய்ய பைக்கில் இருப்பது போல் "நாப்" இருக்கும் (பார்க்க படம்–1)அதை அடைத்து விட்டால் போதும் சிறிது தூரம் சென்றவுடன் அதுவே தானாகவே ஆ.ஃ.ப்பாகிவிடும்.மீண்டும் ஸ்டாட் செய்வதற்குள் நம்மை பாதுகாத்து கொள்ளலாம்.

அது டீசல் ஆட்டோவாக இருக்கும் பட்சத்தில் ஓட்டுனரின் வலது பக்கத்தில் சிகப்பு கலரில் ஆ.ஃ.ப் சோக் உள்ளது (பார்க்க படம் –2) அதை இழுத்தால் ஆ.ஃ.ப்பாகிவிடும்.

சில ஆட்டோக்களில் ஓட்டுனரின் முன் பகுதியில் சிகப்பு கலரில் லிவர் உள்ளது (பார்க்க படம் –3) அதை இழுத்தால் ஆ.ஃ.ப்பாகி விடும்.

இதற்கு ஒன்றும் வழியில்லை என்றால் உங்கள் துப்பட்டாவோ புடவையின் முந்தானையோ கொண்டு ஓட்டுனரின் கழுத்தில் போட்டு பின்னால் இழுத்தால் நிச்சயமாக ஆட்டோவை நிறுத்துவது அவருக்கு பாதுகாப்பு இல்லையெனில் ஆட்டோ நிலைதடுமாறி கவிழும் வாய்ப்புள்ளது.

அவ்வாறு ஆட்டோ கவிழ போகும் என்று தெரிந்தால் தப்பிக்க முயற்சி எடுக்க வேண்டாம்.நடு பகுதியில் இறுக்கமாக பிடித்து கொண்டு இருங்கள்.அடி ஒன்றும் படாது காயங்கள் இல்லாமல் உங்களால் எழமுடியும்.

இறுதியாக..

இன்று ஆட்டோ ஓட்டுனர்கள் பெரும்பாலானவர்கள் படித்தவர்களாகவும் ஒழுக்கமானவர்களாகவும் குடும்ப வறுமை காரனமாகவும் இத்தொழிலுக்கு வருவதால் பெண்களிடம் வரம்பு மீறாமல் கண்ணியமாக நடக்கின்றனர். மேலும் போலிசாரின் வாகன சோதனைகள் அதிகம் நடப்பதால் மது அருந்தும் ஓட்டுனர்கூட பணி நேரத்தில் அருந்துவதில்லை.ஒரு சிலர் செய்யும் தவறுக்காக ஒட்டுமொத்த ஓட்டுனரும் குற்றவாளி இல்லை.அவர்களுக்கும் குடும்பம் உள்ளது.உங்களை நம்பி தான் அவர்கள் வாழுகிறார்கள்.

# அஞ்சான்



## கேள்வி | பதில்

கேள்வி:

அந்தகாலத்து திரைப்படங்களை குடும்பத்துடன் சேர்ந்து பார்த்து ரசித்துக்கொள்ளலாம் ஆனால் இந்தக்காலத்து திரைப்படங்கள் அப்படியில்லை காரணம்?

வி.ஜெகதீஸ்
கூமாங்குளம், வவுனியா.

பதில்: அந்தக்காலத்தில் ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணிகள், இந்தக்காலத்தில் அஞ்சான், நொஞ்சான், குஞ்சான்.

கேள்வி:

என்ன அஞ்சான் இலங்கையின் அரசியல் நிலை தற்போது எந்த அளவில் இருக்கின்றது?

வ.வக்ஷலா
பிரதான வீதி,முல்லைதீவு

பதில்: செப்டெம்பர் வரை காத்திருங்கள்.

கேள்வி:

வெள்ளிக்கிழமைகளில் வாழை இலைகளில் சாப்பிடுவது ஏன்?

இ.ஸ்ரீபன்
பெரியகடை, மன்னார்

பதில்: ஓ... ஸ்ரீபனுக்கா இந்த சந்தேகம்.. வெள்ளிக்கிழமையாவது விரதமிருங்கள். வாழைஇலையில் மச்சம் சாப்பிடகூடாதே அதற்குதான்.

கேள்வி:

அன்பின் அஞ்சான் முன்பெல்லம் பருவங்களுக்கு ஏற்றாற்போல காலநிலை இருக்கும் இப்போதெல்லாம் கோடை காலத்தில் மாரி காலம் போல் மழைபெய்கின்றதே ஏன்?

உ.உதயராசா
பருத்தித்துறை, யாழ்ப்பாணம்

முற்காலத்தில் பருவத்தே பயிர் செய்தனர் - இக்காலத்தில் சிறு பருவத்தே.......
காலம் மாறிப்போச்சுதே.. இதுதான் கலிகாலம்.

கேள்வி:

இலங்கையில் புலிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போகின்றது உண்மையா?

க.தர்ஷா.
உதயநகர், கிளிநொச்சி.

நான் தெஹிவளைக்கு போய் ரொம்ப காலமாச்சே.... நீங்களாவது போய் கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்களன்.

கேள்வி:

தங்களை எனக்கு பார்க்கனும் போல் இருக்கின்றது

ச.லிங்கேஸ்வரன்
கல்லடி, மட்டக்களப்பு.

இப்போது தானே வந்தேன். அதற்குள் ஏன் இந்த அவசரம். பார்க்கலாம்.....



# ஆங்கிலம் அவசியம் 1



வணக்கம் உறவுகளே!

இன்றிலிருந்து "ஆங்கிலம் துணுக்குகள்" எனும் ஒரு பகுதியையும் தொடர்ந்து வழங்கலாம் என்றுள்ளோம். இது எமது வழமையான "ஆங்கில பாடப் பயிற்சி" திட்டத்திலிருந்து வேறுபட்டது. இருப்பினும் இத்துணுக்குகள் ஆங்கிலம் கற்கும் சிலருக்கு, குறிப்பாக ஆரம்ப நிலை ஆங்கிலம் கற்போருக்குப் பயன்படும் என கருதுகிறோம்.

முக்கியமாக "Grammar Patterns" களை மனப்பாடம் செய்துகொள்ளுதல் பயனுள்ளதாக இருக்கும்.

ஒரு சொல்லை, ஒரு வாக்கியத்தை, ஏன் ஒரு முழு ஆக்கத்தையே வேண்டுமானாலும் கெப்பிட்டல் எழுத்துக்களிலேயே (CAPITAL LETTERS) எழுதலாம். அது உங்கள் விருப்பம்.

ஆனால் ஆங்கில சிற்றெழுத்துக்களில் (Simple Letters) எழுதுவதானால், ஆங்கில மொழிக்கே உரிய சிறப்பியல்புகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியது மிக முக்கியம்.

How To Use Capital Letters

1. ஒரு வாக்கியத்தின் ஆரம்பத்தின் முதல் எழுத்து எப்பொழுதும் கெப்பிட்டல் எழுத்தாகவே இருக்கவேண்டும். (Capital letters are always used at the beginning of a sentence.)

உதாரணம்:

The car is running

I am looking for a job.

He doesn't understand.

Do you speak in English?

Where are you going?

2. கிழமை, மாதம், பெயர், ஊர், நாடு, மொழி, மதம், போன்றவற்றை எழுதும் பொழுது அதன் முதல் எழுத்தை கட்டாயம் கெப்பிட்டல் எழுத்திலேயே எழுத வேண்டும். இவை வாக்கியத்தின் மத்தியில் வந்தாலும் அப்படித்தான்.

2. கிழமைகள்: Sunday, Monday, Tuesday, Wednesday, Thursday, Friday, Saturday

3. மாதங்கள்: January, February, March, April, May, June, July, August, September, October, November, December

4. பெயர்கள்: Ellalan, Iravanan, Sarmilan, Kavitha, Thamilovia, Tamilnenjan, Tamilselvan

5. ஊர்கள், நகரங்கள்: Jaffna, Chennai, Point Pedro, Betticola, Tricomalee, Madurai, Kilinochchi

6. நாடுகள்: Tamileelam, India, America, British, France, Netherland, Norway, Japan

7. மொழிகள்: Tamil, English, Chinese, Latin, French, Indhi

8. மதங்கள்: Hindu, Islam, Christian, Buddhism - God, The Prophet Mohammed, Jesus

9. ஆங்கிலத்தில் "நான்" என்று குறிப்பதற்கு எப்போழுதுமே கெப்பிட்டல் "I" யை மட்டுமே பயன்படுத்த வேண்டும். (சிறிய "i" பயன்படுத்துவதில்லை)

# ஒரே ஒரு SMS வெல்லுங்கள் 500/- ரீலோட்

நீங்கள் செய்யவேண்டியது, அடையில் மறைந்திருப்பவர் யார்?

மறைந்திருப்பவர் பெயர் [இடைவெளி] உங்களுடைய பெயர், முகவரி என்பவற்றை Type செய்து 077 9903723 என்ற எண்ணுக்கு SMS செய்யுங்கள்

குறித்த மாதம் முழுவதும் SMS அனுப்பலாம், ஒருவர் ஒரு SMS மாத்திரமே அனுப்பமுடியும், மாதஇறுதியில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு 500 ரூபாய் பெறுமதியான ரீலோட் பரிசு வழங்கப்படும்

பிரதான அனுசரணையாளர்:

**நியூ வெல்டன் கல்லூரி**

**தரம் 6 முதல் A/L வரை**

உமா மகேஸ்வரன் வீதி, (கோவில்குளம் சந்தி அருகில்) வவுனியா. 077-8008950,024-3200801

**Job Bank**

வேலைவாய்ப்பு தருணர்களாக இருந்தாலும் சரி வேலைவாய்ப்பை பெறுபவர்களாக இருந்தாலும் சரி எங்களுடன் இணைந்து உங்கள் தேவைகளை நிவர்த்தி செய்வது தான் இந்த JOB BANK இன் சேவை.


வியாபார நிறுவன உரிமையாளர்களே! உங்களுடைய தொழிலுக்குத் பொருத்தமான பணியாளர்களை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றீர்களா?

மாணவ மாணவியர்களே! படித்துவிட்டு உங்களுக்கு விருப்பமான வேலை ஒன்றை கற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளீர்களா?

அழையுங்கள் 077 900 94 91 | 024 222 57 99




என் மனைவிக்கு என் மேலே பிரியம் அதிகம் எப்படி?
என்னை அடிக்கும்போது கூட ரத்தம் வராமத்தான் அடிப்பா



புரியுது... நீங்க சொல்றது புரியுது...
உங்க வெயிட் நார்மலாத்தான் இருக்கு..!
ஆனா இந்த வெயிட்டுக்கு இன்னும் நீங்க மூனு அடி வளரனும்...
கொஞ்சம் குட்டையா இருக்கிங்க.

# பூங்கோதை

[தொடர்கதை]

பருத்திதாசன்
யாழ்ப்பாணம்

வைகறை மேகங்களை துடைத்துக் கொண்டு வெளிவரும் ஆதவனை ஆரோகணித்து வரவேற்க ஆயத்தமாகும் அந்த இளங்காலையில் கேட்கும் இனிய கீதங்களை ரசிப்பதற்காய் இமைக்குள்ளே விழிகளைத் திறந்தபடி அமைதியாகப் படுத்திருந்தவளின் அருகிருந்து தலையை தடவியபடி "பள்ளிக்கூடம் போகலையோ நேரமாகுது" என்று மெதுவாகக் கேட்ட குரல் பட்டு மலர்ந்து முனகினாள் பூங்கோதை "இண்டைக்கு பள்ளிக்கூடத்தில கவிதைப்போட்டி என்றெல்லோ சொன்னனி பிள்ள விடிய வெள்ளண எழும்பி ஒருக்கால் எண்டாலும் குரல் தடக்காமல் வாசிச்சு பாத்தால் தானே நல்லது. நாலுபேருக்கு முன்னால் நடக்கிற போட்டியெல்லோ, எழும்பு பிள்ள" தாயின் அன்புக்குரல் அவளின் திறமைக்கு திறப்பணம் ஆகியது.

கவிதைகளில் அலாதிப்பிரியம் கொண்டு தன்னை ஒரு தலை சிறந்த கவிதாயினியாய் உருவாக்க வேண்டுமென்பதில் கட்டுரை கொண்டவள் இன்னும் தூங்குவாளா என்ன...?

கடுகதி போல் தன் கடன்களை முடித்து போட்டிக்கான கவிதையினை தன் நினைவரங்கத்திலே பாடிப்பழகினாள். கண்ணாடியின் முன் கவியரங்கை நடத்திப் பார்த்தவளை பார்த்த பூபதி பூரித்துப் போனாள் "அட இவ்வளவு அழகான என் மகள் பெரிய போட்டி ஒன்றில் படித்துப் பரிசு பெறுவதை என்று காண்பேனோ..." என்று மனதுக்குள் நினைத்தபடி அகன்று அடுக்களைக்குள் நுழைந்தாள். "அம்மா.." என்று அழைத்த குரல் கேட்டு திரும்பிய பூபதி வெள்ளைக்குயிலாக நின்ற தன் மகளை கண்டு நிறைந்தாள் மனம் "என்னம்மா சாப்பாடு" என்றவளின் பார்வைக்கு "உனக்கென்ன பிடிக்குமோ அதைவிட ஏதும் இதுவரைக்கும் செய்திருப்பேனோ இல்லைத்தானே இந்தா நெய்த்தோசை" என்றாள் தாய் தலை நரைத்தாலும் தன் மகளுக்கெனச் செய்வதில் மனங்கோணாதவள் அவள் "போய்வாறன் அம்மா..." செல்லமாய் மகள் சொல்லிப்போகும் வெள்ளை அழகை மனதுள் ரசித்தபடி தன் வேலையில் மூழ்கினாள் பூபதி.

பாடசாலையின் அரங்கம் கவிதைகளால் ஆர்ப்பரித்தது தரம் பன்னிரெண்டு மாணவி பூங்கோதையின் கவிதை இடம்பெறும் ஒலித்தது ஒலிபெருக்கி. சபையோர் வணக்கத்துடன் ஆரம்பித்த கவிதை சபையோரின் கண்களில் நீர் வழிய "ஆளாய் நீ வளர வேண்டுமென்று யாரும் அறியாமல் தொழுவேனே நானிருந்து" என்ற வரிகளுடன் நிறைவு பெற இந்த ஆண்டுக்கான மாகாண மட்டப்போட்டிகள் நிறைவு பெற்றன

(தொடரும்...)


பிக்கு!
நக்ருசாரின் மனைவிற்கு பலாப்பழம் வேண்டுமாம்
ஆனால் இது பலாப்பழ சீசன் இல்லையே!
அப்பே எனக்கு இது உதைபடுகிற சீசன் போல
கிணத்துக்கிட்ட ஒரு பலாமரம் இருக்கு அதுல ஒரு பலாப்பழம் இருக்கு
உன்னால முடிஞ்சா அந்த மரத்துல ஏறிக்கோ!
என்னால ஏற முடியாதப்பா
நான் ஏறுவேன்
வாவ்..
பலாப்பழம் மட்டும் கிணத்துல விழுந்துச்சு


உன்ன கிழிச்சு போட்டுடுவேன்
அப்படி செய்ய மாட்டேன்
அப்போ ஏறு!
இவன் மரத்துல ஏறி அரை மணிநேரம் ஆச்சு
பலாப் பழம் உயரத்துல இருக்கு
ஸ்ப்ளாஷ்.....
விழுந்தது குரங்கா, பலாப்பழமா?


ஆ... என்ன இனிப்பாக இருக்கு இந்த தண்ணீர்
ஐயோ இழுக்க முடியலையே..
என்னடா செய்யற?
இந்த கிணத்துத் தண்ணீர் ரொம்ப இனிப்பா இருக்கு
அதான் இந்த கிணத்த கட்டி இழுத்துட்டு போனா நல்லாயிருக்கும்னு பாக்கறேன்
அப்படியா? நானும் உதவி செய்றேன்
அப்போ இன்னும் பெரிய கயிறு எடுத்துட்டு வரேன்


ஐயோ!
ஹோ
இழு...
ரொம்ப கஷ்டம்
என்னடா செய்றாங்க இவங்க
இந்த கிணத்த வீட்டுக்கு இழுத் துட்டு போகலாம்னு டிரை பண்றோம் நீயும் ஹெல்ப் பண்றியா?
ஆ...
முட்டாள்களா! இந்த கிணத்த எப்படிடா இழுக்க முடியும்?
ஆ...
மாலை
என்னடா இது?
கிணத்ததான் இழுக்க முடியல இந்த வீட்டயாவது கிணத்துக்கு பக்கதில இழுத்துட்டு போகலாம்னு பாக்கறோம்
முற்றும்!

# கவிதைச் சாரல்

கவிதைக்கு களம் அமைத்து தரும் கவிதைச் சாரலில்
உங்கள் கவிதையும் நனைந்திடலாம் வழமையான
எமது முகவரிக்கு அனுப்பிவையுங்கள்







## உன்னை மட்டும்

உயிர் கொண்ட
என் இதயத்தில்
என்றும்
உன்னை மட்டும்
சுமக்க
விரும்புகிறேன்
சுமையாக
அல்ல சுகமாக

ஜெகதீஸ் நிகிந்தா
பூந்தோட்டம்

## நான் நீ அவள்

உன்னில் இருந்து நான்
நீங்கியவேளை
ஒருமுறை இறந்தேனடி...

உன் நினைவுகள்
என்னைச்சுடும்பொழுது
மறுமுறை இறந்தேனடி...

மாற்றானுக்கு நீயோ மனைவியானதும்
மடிந்துபோனதடி உன் நினைவுகளுடன்
வாழ்ந்த என் ஜீவனும்...

உன் நினைவுகளோடு
இறந்து போன என்ஜீவனுக்கு
மீண்டும் ஒரு ரோஜா
இதழ்களாள் உயிர்கொடுத்தாள்...

ஆதவனின் சிரிப்பாள்
உலகமே ஒளிர்வதுபோல
இன்று என் ஜீவனும்
அவள் ஒளியினால் பிரகாசிக்கின்றது...

அர்ஷாஜினி
வல்வெட்டித்துறை.



## அன்பு

எனக்கு மீண்டும்
ஒரு
ஜனனம் நிகழ
வேண்டும்
உனக்காக மட்டும்
நான்
தங்கையாக பிறப்பதற்கு

செல்வநாதன் பிருத்திகா
நெடுங்கேணி

## காதல்

கண் விழிகளால்
என்னை மயக்கி
காதல் வலையில்
சிக்கி தவிக்கவைத்து
கொஞ்சம் கொஞ்சமாய்
என்னுயிரை குடிக்கின்றாய்
இங்கு உடல் மட்டும் தான்
என்னிடம் உயிர்
உன்னிடம்

எஸ்.சுதா
தெற்கிலுப்பைக்குளம்,
வவுனியா



## கல்வி

கல்வியை கண்டு துவண்டு
விடாதே மனிதா
கல்விகள் எல்லாம் உந்தன்
வாழ்க்கையின்
முடிவுரையல்ல முகவுரையே
கல்வியை நீ
கற்றுக் கொண்டால் வெற்றியுன்னை
சூழ்ந்துகொள்ளும்
கல்வியின்றி சிகரம் தொடமுடியாது
கல்வியோடு முயன்றுபார்
நீயும் ஒருநாள் சிகரம் தொடுவாய்
கல்வியை
கண்டு ஓடாதே அது உன்னை
வாழவைக்கும்
உன்னை வரவேற்கும்

எஸ்.யதுர்சன்
ஓமந்தை

## மூச்சு

நான்
காலங் கடந்த இரவல்...!
ஆனாலும்
காலாவதியாகாமல்
காத்திருக்கிறேன்
உன்னால்
அர்ச்சிக்கப்படுவதற்காய்...

பருத்திதாசன்
யாழ்ப்பாணம்

දයාබර පා කයිනි,

මෙම කලාපයෙන් ක්‍රියාපද රාශියක් ඉගෙන් ගනිමු. එවා වර්තමාන කාල හා අතීතකාල වශයෙන් හඳුනා ගනිමු

அன்பார்ந்த வாசகர்களே!

இந்தஇதழ் மூலம் பேச்சுமொழிவடிவத்தில் பயன்படுத்தும் நிகழ்கால மற்றும் இறந்தகால வினைச்சொற்களை அறிந்துகொள்வோம். வினைச்சொற்களின் பொதுவான கருத்து தரப்பட்டுள்ளது. பின்வரும் இதழ்களின் இச்சொற்களின் பயன்பாடுகளை அறிந்து கொள்வோம்.

| වර්තමානකාලය நிகழ்காலம் | | இறந்தகாலம் අතීතකාලය |
|---|---|---|
| 1. යනවා | போதல் | ගියා |
| 2. එනවා | வருதல் | ආවා |
| 3. කනවා | சாப்பிடுதல் | කෑවා |
| 4. බොනවා | குடித்தல் | බීවා |
| 5. ගන්නවා | வாங்குதல் / எடுத்தல் | ගත්තා |
| 6. ලියනවා | எழுதுதல் | ලිව්වා |
| 7. නානවා | குளித்தல் | නෑවා |
| 8. සෝදනවා / හෝදනවා | கழுவுதல் | සේදුවා / හේදුවා |
| 9. බලනවා | பார்த்தல் | බැලුවා |
| 10. පනිනවා | பாய்தல் | පැන්නා |
| 11. පිරෙනවා | நிறைதல் | පිරුණා |
| 12. වැටෙනවා | விழுதல் | වැටුණා |
| 13. නිදාගන්නවා | நித்திரை செய்தல் | නිදාගත්තා |
| 14. පුරවනවා | நிறைத்தல் | පිරෙව්වා |
| 15. නගිනවා | ஏறுதல் | නැග්ගා |
| 16. පීරනවා | சீவுதல் (தலை) | පීරුවා |
| 17. කඩනවා | உடைத்தல் | කැඩුවා |
| 18. පෙරළනවා | பிரட்டுதல் | වෙරළුවා |
| 19. කියනවා | சொல்லுதல் | කිව්වු |
| 20. දුවනවා | ஓடுதல் | දිව්වා |
| 21. තම්බනවා | அவித்தல் | තැම්බුවා |
| 22. පුච්චනවා | சுடுதல் (சமையல்) | පිච්චුවා |
| 23. පත්තුකරනවා | மூட்டுதல் | පත්තුකළා |
| 24. පුම්බනවා | ஊதுதல் | පිම්බුවා |
| 25. පොවනවා | பருக்குதல் | පෙව්වා |
| 26. කවනවා | ஊட்டுதல் | කැව්වා |
| 27. අදිනවා | இழுத்தல் | ඇද්දා |
| 28. අල්ලනවා | பிடித்தல் | ඇල්ලුවා |
| 29. විසිකරනවා | எறிதல் | විසිකළා |
| 30. උයනවා | சமைத்தல் | ඉව්වා |

මතු සම්බන්ධයි
தொடரும்

பி.வி.செல்வராஜ்
விரிவுரையாளர் (ஓய்வுபெற்ற) தேசிய கல்வியியற் கல்லூரி
පී.වී.සෙල්වරාජ්
කථිකාචාර්ය (විශ්‍රාමික)

# அறிவுக்கு விருந்து 1



குறுக்கெழுத்துப் போட்டி
(மாதநிலா குட்டீஸ்களுக்கானது)

| | | | |
|---|---|---|---|
| 1 | | 2 | ■ |
| | 3 | | |
| 4 | | | |
| | 7 | | |
| 5 | | ■ | 6 |

குட்டீஸ்களே!
விடைகளை கேள்வி இலக்கத்துடன் சேர்த்து எமக்கு அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள்

**இடமிருந்து வலம்**

1. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் ........................... இதுவாகும்.
3. ஐந்தை இரண்டால் பெருக்கினால் வரும்
4. மிக முக்கியமான பாடங்களில் இதுவும் ஒன்று

**மேலிருந்து கீழ்**

2. .............................................சுகம் தரும்
5. பனை ஓலையில் இதுவும் பின்னலாம் (தலைகீழ்)
6. இதற்கு எல்லையே இல்லை (தலைகீழ்)
7. தச்சுத் தொழில் செய்பவர்கள் அதிகமாக பயன்படுத்துவது

குட்டீஸ்களே! விடைகளை கேள்வி இலக்கத்துடன் சேர்த்து எமக்கு அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள்

விடைகளை ஒரு வெள்ளைத்தாளில் எழுதி எங்களுக்கு அனுப்பிவையுங்கள். முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற அனைத்து வெற்றியாளர்களும் 1ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எமது தொடர்பிலக்கத்துடன் தொடர்புகொண்டு தங்களுடைய பரிசில்கள் சம்பந்தமான விபரங்களை அறிந்து பெற்றுக்கொள்ளலாம்

## பிறந்தநாள் வாழ்த்து

நீங்களும் உங்கள் செல்லக்குழந்தைகளின் பிறந்தநாளை மாதநிலாவில் பிரசுரித்து வாழ்த்த விரும்புகின்றீர்களா, அப்படியாயின் ஐந்து (5) வயதிற்குட்பட்ட உங்கள் குழந்தைகளின் பெயரையும் உங்கள் முகவரியையும் குறிப்பிட்டு அவர்களின் புகைப்படத்தோடு எமது வழமையான முகவரிக்கு அனுப்பி வைத்து உங்கள் குட்டி குழந்தைகளை எங்களோடு சேர்ந்து வாழ்த்துங்கள்.



இம்மாதம் (28.06.2015) தனது முதலாவது பிறந்தநாளை கொண்டாடும்

**ஆ.ஹரீஸ்காந்**
பூந்தோட்டம், வவுனியா

இவரை மாதநிலா சார்பில் நாங்களும் வாழ்த்துகின்றோம்

# உலக சுற்றாடல் தினம்

ஜூன்-05



உலக சுற்றாடல் தினம், ஓர் சர்வதேச தினமாக ஐ.நாவின் பொதுச்சபையினால் 1972 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. அத்தினத்திலேயே ஐ.நாவின் மனித சுற்றாடல் மாநாடு ஆரம்பமானது. முதலாவது சர்வதேச சுற்றாடல் தினம் 1973 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகின்றது. அன்றிலிருந்து சுற்றாடல் தினம் வெவ்வேறு தொனிப்பொருட்களில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. 41 வது சர்வதேச சுற்றாடல் தினம் 2014 ஜூன் மாதம் 5ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதற்கமைவாக 2014 ஆம் ஆண்டின் சர்வதேச சுற்றாடல் தினத்தின் தொனிப்பொருளாகவிருப்பது, "சிறு தீவுகளும் காலநிலை மாற்றமும்" என்பதாகும், வெள்வேறு சுற்றாடல் காரணிகளால், கடல் மட்டம் உயர்ந்து செல்வதே சிறு தீவுத் தேசங்களை அச்சுறுத்தும் பிரதான சுற்றாடல் பிரச்சனையாகவுள்ளது. மனித செயற்பாடு களால் பச்சை வீட்டு வாயுக்கள் சுற்றாடலுக்கு வெளியிடப்படுவதே வளிமண்டலத்தின் வெப்பநிலை அதிகரிப்புக்கான முக்கியகாரணமென விஞ்ஞனிகள் கூறுகின்றனர்.

வளி மண்டலத்தில் பச்சைவீட்டு வாயுக்களின் அளவு அதிகரிக்க, வளிமண்டலத்தின் வெப்பநிலை அதிகரிக்கின்றது. இது காற்று, மற்றும் மழைவீழ்ச்சியில் பாரிய தாக்கத்தினை உண்டு பண்ணி காலநிலை மாற்றத்தினை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறான காலநிலை மாற்றங்களால் சிறுசிறு தீவுகளில் வாழ்வோர் அடிக்கடி வெள்ளப்பெருக்கினாலும் சூறாவளியினாலும் பாதிக்கப்படும் சாத்தியக்கூறுகளை அதிகரிக்கின்றது. காலநிலைமாற்றத்தினால் கடல் மட்டம் அதிகரிக்கப்படுவதனைத் தடுப்பதில் கவனம் செலுத்தப்படவில்லையானால், சில தீவுகள் மனித வாழ்க்கைக்கு உகந்தவையல்லாதனவாக மாறிவிடக்கூடும்.

இலங்கை ஒரு சிறு தீவாக இல்லாத போதும், ஒரு தீவென்ற வகையில், பல அமைப்புகளையும் மாணவர்களின் பிரதிநிதித்துவத்தினையும் ஒன்று திரட்டி, நாடளாவிய ரீதியில் பல்வேறு திட்டங்களை அமுல்ப்படுத்துவதன் மூலம், சூற்றாடல் மாற்றங்களை குறைப்பதற்கு, சுற்றாடல் மற்றும் நிலையான சக்தி அமைச்சினால் தேவையான பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

# நான் அழகாய் இருக்கேனா

## கணவரிடம் சும்மா தொணதொணக்காதீங்க!

இல்லறத்தில் கணவன் மனைவிக்கு இடையே ஆயிரம் விசயங்கள் பேசுவதற்கு இருக்கும். அந்தரங்கமாக பேசும் விசயங்களை அவையில் பேசுவது நாகரீமாகஇருக்காது. இது சிக்கலை ஏற்படுத்திவிடும். அதேபோல் கணவரிடம் நடந்து கொள்வதற்கும் சில வரைமுறைகள் உண்டு. இவற்றை கடைபிடித்தால் குடும்ப பயணம் சிக்கலின்றி இருக்கும் என்கின்றனர் உளவியல் நிபுணர்கள். ஆண்களுக்கு எது எது பிடிக்காது என்று பட்டியலிட்டுள்ளனர். அவற்றை படித்து பின்பற்றிப் பாருங்களேன்.

அடிக்கடி போன் பண்ணாதீங்க

காதல் திருமணமோ, நிச்சயிக்கப்பட்ட திருமணமோ கணவன் மனைவிக்கு இடையேயான அன்பிற்கும் ஒரு அளவு உண்டு. அடிக்கடி போன் செய்து நச்சரித்தால் வேலை கெடும். அந்த எரிச்சலில் கணவர் ஏதாவது கத்துவார் பின்னர் பிரச்சினை பெரிதாகும். எனவே அன்பாயிருக்கிறேன் என்று போன் பண்ணி டிஸ்டர்ப் செய்வது பிடிக்காதாம்.

துணைக்கு கூப்பிடாதீங்க

சொல்ல வந்த விசயத்தை நேரடியாக சொல்லுங்கள். எதையாவது சொல்ல வந்து பின்னர் அதை விடுங்க என்று பொடி வைத்து பேசுவது கணவரை எரிச்சல் படுத்துமாம்.


எந்த விசயமென்றாலும் தனியாக சமாளித்து பழகுங்கள். சின்ன சின்ன விசயத்திற்கெல்லாம் கணவரை துணைக்கு அழைப்பது பிடிக்காதாம். ஏனெனில் அவருக்கும் நிறைய வேலை இருக்கும் இல்லையா?

சந்தேகம் வேண்டாம்

சம்பளப் பணத்தைப் பற்றி எதற்கெடுத்தாலும் கணக்கு கேட்காதீங்க. பெரும்பாலான கணவர்களுக்கு மனைவி மேல் வெறுப்பு வர அதுதான் காரணமாக உள்ளது.


வேலை விசயமாக வெளியே அலைந்து விட்டு கணவன் வீட்டுக்கு திரும்பும் போது முகத்தை உர்ரென்று வைத்துக்கொண்டு பேசுவது கணவனுக்கு பிடிக்காதாம். முக்கியமா

(தொடரும்...)



# 48 வரலாற்று நாயகன்

நாம் விரும்பும் இலக்கை அடைவதற்கு உடல் வலிமையை விட மனவலிமைதான் முக்கியம் என்று வாழ்ந்துகாட்டிய வரலாற்று மாந்தர்கள் பலர். உலகத்தின் உதாசீன பேச்சுக்களையும் ஏளன சிரிப்புகளையும், கேலி கிண்டல்களையும் தாண்டி ஒருவன் சாதனை படைக்க வேண்டுமென்றால் அதற்கு உடல் வலிமை மட்டும் போதாது. இரும்பு போன்ற மன வலிமையும் வேண்டும். நாம் தெரிந்துகொள்ளவிருக்கும் வரலாற்று நாயகருக்கு அப்படிப்பட்ட மன வலிமை இருந்தது இல்லையென்றால் பிறந்தபோதே ஆரோக்கியமின்றி ஒழுங்காக பள்ளிக்குக்கூட செல்லாமல் குண்டர் கும்பல்களில் சேர்ந்து எங்கெல்லாம் சண்டை நடக்குமோ அங்கெல்லாம் சண்டையில் ஈடுபட்ட ஓர் இளைஞனுக்கு தற்காப்பு கலையில் சாதனை செய்ய வேண்டும் என்ற கனவும், ஒரு சிறந்த நடிகனாக வரவேண்டும் என்ற ஆசையும் உதித்திருக்காது. பல இன்னல்களை கடந்து தனது கனவுகளை நனவாக்கவும் முடிந்திருக்காது.



1959 ஆம் ஆண்டு சராசரிக்கும் குறைவான உயரத்தோடும், ஒல்லியான தேகத்தோடும் அமெரிக்க மண்ணில் வந்திறங்கினான். அந்த 18 வயது இளைஞன். அப்போது ஜான் வேய்ங், ஜேம்ஸ் டீன், சார்ல்ஸ் அட்லஸ் போன்ற நடிகர்கள் புகழின் உச்சியில் இருந்தனர். ஆனால் பார்ப்பதற்கு சாதாரணமாக இருந்த அந்த இளைஞன் என்ன சொன்னான் தெரியுமா? அந்த ஆக்ஷன் கதாநாயகர்களுக்கெல்லாம் இனி நான்தான் மாற்று என துணிந்து சொன்னான். அப்போது

# புரூஸ் லீ

## வாழ்க்கை வரலாறு

அமெரிக்கர்கள் மட்டுமல்ல அந்த இளைஞனின் சமூகம்கூட அவனை ஏளனமாக பார்த்தது. ஆனால் ஏளனங்களை ஏணிப்படிகளாக்கி அடுத்த 14 ஆண்டுகளில் வெற்றிக்கொடி நாட்டி சினிமா என்ற வாகனத்தின்மூலம் தற்காப்புக்கலைக்கு உலகலாவிய அங்கீகாரம் பெற்றுத்தந்தார் அந்த தற்காப்புக்கலை வல்லுநர் திரைப்பட நடிகர். அவரது பெயர் புரூஸ் லீ.

1940 ஆம் ஆண்டு நவம்பர் 27 ந்தேதி அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ மாநிலத்தில் பிறந்தார் புரூஸ் லீ. பிறந்தபோது அவருக்கு இடப்பட்ட பெயர் லீ ஜ/ன்பேன்" அவரது தந்தை லீ கோய்ன் ஒரு சீனர், தாயார் கிரேஸ் ஐரோப்பியர். சிறுவயதில் ஹாங்காங்கில் வாழ்ந்தது புரூஸ் லீயின் குடும்பம். அங்கே பெரும்பாலான சிறுவர்கள் தெருக்களில்தான் பொழுதைக் கழிப்பார்கள். அப்படி நிறைய நேரத்தைக் கழித்த புரூஸ் லீக்கு சண்டை போடுவதில் இருந்த ஆர்வம் படிப்பில் இல்லை. மேலும் சுமார் 20 சீனப்படங்களில் குழந்தை நட்சத்திரமாக தோன்றும் வாய்ப்பு புரூஸ் லீக்கு கிடைத்தது. சண்டையையும் சினிமாவையும் எடுத்துக்கொண்டு பள்ளியையும் பாடங்களையும் ஒதுக்கினார் புரூஸ் லீ.



இயற்கையாகவே நன்றாக சண்டைபோடும் திறமை அவருக்கு இருந்ததால் ஒரு கும்பலுக்கு தலைவனாகவும் இருந்தார். புரூஸ் லீயின் தந்தையோ நன்கு படித்து தொழில்துறையில் ஈடுபட வேண்டும் என விரும்பினார் ஆனால் சண்டைபோட்டு எல்லோரையும் வெற்றிக்கொள்ள வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தார் புரூஸ் லீ. சிலமுறை பெரிய குண்டர்களிடம் மோதி தோல்வியும் கண்டிருக்கிறார். அப்போதுதான் ஒரு நல்ல தற்காப்புக்கலையை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு எழுந்தது. தன் தந்தையிடமே குங்பூ என்ற பாரம்பரிய சீன தற்காப்புக்கலையைக் கற்றுக்கொண்டார். அடிக்கடி அடிதடிகளில் ஈடுபட்டதால் புரூஸ் லீயின் கொட்டத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாத பெற்றோர் அவரிடம் 100 டாலரைக் கொடுத்து அமெரிக்காவில் போய் எப்படியாவது பிழைத்துக்கொள் என்று கப்பலேற்றிவிட்டனர்.

அப்போதுதான் 18 வயது இளைஞனாக அமெரிக்கா வந்து சேர்ந்தார் புரூஸ் லீ. சியாட்டலில் இருந்த ஒரு நண்பரின் சீன உணவக விடுதியில் தங்கிக்கொண்டு தற்காப்புக் கலையை கற்றுக்கொடுக்க தொடங்கினார். அந்த விடுதியில் வேலையும் பார்த்தார். அவரது எண்ணம், செயல் எல்லாம் குங்பூ என்ற தற்காப்புக்கலையைப் பற்றியே இருந்தது. மேற்கத்திய மல்யுத்தம், ஜீடோ, கராத்தே, குத்துச்சண்டை ஆகியவற்றையும் கற்றுக்கொண்டு சில புதியபாணி அசைவுகளையும் சேர்த்து அவர் சொந்தமாக ஒரு தற்காப்புக்கலையை உருவாக்கினார். அதற்கு ஜீட்குன்டோ என்று

(தொடரும்....)

# 50 இல்லத்தரசிகளுக்கு

பெண்கள் பொதுவாக சமையலில் வெளுத்து வாங்குவார்கள். அவங்களுக்கு சொல்லிக்கொடுக்க வேண்டியதில்லை. இருந்தாலும் அவர்களின் சமையலுக்கு உதவுவதற்காக குட்டிக் குட்டி டிப்ஸ். பல பேருக்குத் தெரிஞ்சதும் இருக்கலாம், தெரியாததும் இருக்கலாம். உங்களுக்குத் தேவையான டிப்ஸை எடுத்துக்கோங்க.. குடும்பத்தாரின் பாராட்டை அள்ளிக்கோங்க!

டீத்தூள் வைத்திருக்கும் பாட்டிலில்உபயோகித்த ஏலக்காய் தோல்களைப் போட்டு வைத்திருந்தால் டீ ஏலக்காய் மணத்தோடு சுவையாக இருக்கும்.

மழை, குளிர் காலங்களில் வடகம் நமத்துப் போய் நன்றாகப் பொரியாது. வெறும் வாணலியை அடுப்பில் வைத்துச் சூடேற்றி, அதில் வடகத்தைப் போட்டு, சற்றுப் புரட்டி எடுத்து விட்டு, எண்ணெயில் பொரித்தால் நன்றாகப் பொரியும்.

தேங்காய் சட்னி மிகவும் சுவையாக இருக்க நாம் அரைக்கும் சட்னியில் பாதி தேங்காயும், பாதி கொத்தமல்லியும் சேர்த்து அரைத்தால் மிகவும் ருசியாக இருக்கும்.

வெங்காய ஊத்தப்பம் செய்யும்போது தோசை இரு புறமும் வெந்து இருந்தால்தான் சுவையாக இருக்கும். தோசையின் நடுப் பகுதியில் சிறு ஓட்டை போட்டு எண்ணெய் ஊற்றினால் விரைவில் வெந்தும், சுவையாகவும் இருக்கும்.

தோசைக்கு ஊற வைக்கும்போது 1 கிலோவிற்கு 50 கிராம் வேர்க்கடலை, 50 கிராம் பட்டாணி சேர்த்து ஊற வைத்து அரைத்து மாவுடன் கலந்து தோசை வார்த்தால் நிறமான, சுவை அதிகமான, சத்து நிறைந்த தோசை ரெடி.

சமைத்த சாதம் மிஞ்சிப் போய் விட்டால், அதைப் போல் இரண்டு பங்கு தண்ணீரைக் கொதிக்க வைத்து, அதில் பழைய சாதத்தைக் கொட்டி, ஒரு கொதி வந்ததும் இறக்கி வடித்து விடவும். பின்னர் மறுபடியும் 5 நிமிடம் வடித்த சாதத்தை அடுப்பில் வைத்து இறக்கினால் நீர்ப்பசை அகன்று புதிதாகச் சமைத்ததைப் போல் இருக்கும்.

வீட்டில் ஜாம் தயாரிக்க விரும்பினால் சரியாகப் பழுக்காத பழங்களையே பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் ஜாம் நீண்ட நாட்களுக்குக் கெடாமல் இருக்கும்.

காலிபிளவரை சமைக்கும் முன் அவற்றைக் கொஞ்சம் கொதிக்க வைத்த உப்பு நீரில் சிறிது நேரத்திற்கு முக்கி எடுக்கவும். அதனால் அந்த பூக்களுக்குள் உள்ள கண்ணுக்குத் தெரியாத சிறு பூச்சிகள் விலகிவிடும்.

குக்கரில் பருப்பை சமைக்கும் போது, ஒரு டீ ஸ்பூன் மஞ்சள் தூளையும், ஒரு டீ ஸ்பூன் நெய்யையும் அதற்குள் சேர்த்து விடுங்கள். அதிலிருந்து வரும் மணத்திற்கே, அனைவரும் ஒரு பிடி பிடித்துவிடுவார்கள்.

நன்றாகக் காய்ந்து போன பாண், பணிஸ் போன்றவைகளை எடுத்துத் தண்ணீர் கலந்து பிசைந்து விடுங்கள். நறுக்கிய பச்சை மிளகாய், இஞ்சி, வெங்காயம், பூண்டு போன்றவற்றுடன் கொஞ்சம் உப்பை சேர்த்து மாவாக ஆக்கி விடுங்கள். கொஞ்சம் எண்ணெயை சுட வைத்து இந்த கலவையை வடை சுடுவது போல் போட்டு பொன்னிறமாகும் வரை பொரித்து விடுங்கள். பஜ்ஜிகளுக்கு போட்டியாக சூப்பர் சுவையாக இருக்கும்.

சப்பாத்திக்கு மாவு உருட்டும் போது அந்த

# இனிய யோசனைகள் 

உருட்டு பலகையின் கீழ் ஒரு சமையலறைத் துணியை போட்டுக் கொள்ளுங்கள். இதனால் அந்த பலகை ஆடாமலும் விலகாமலும் இருக்கும், நீங்களும் வேகமாக மாவைத் தேய்க்கலாம்

வாழைத்தண்டுகள், கீரைத்தண்டுகள் மற்றும் கொத்துமல்லி இலைகள் வாடாமல் இருக்க அவற்றை அலுமினியம் காகிதத்தில் சுற்றி வைக்கலாம்.

பழம், ஃப்ரூட் சாலட், ஜூஸ் ஆகியவற்றின் சுவையை அதிகரிக்க சிறிதளவு தேன் சேர்க்கலாம்.

வீட்டிலேயே கேக் செய்யும் பேது, பேகிங் ஓவன் தட்டில் சரியாக எண்ணெய் அல்லது நெய் தடவியிருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்பே பேக் செய்யத் தொடங்குங்கள்.

தேங்காயை சரிபாதியாக உடைக்க தண்ணீரில் நனைத்து பின்னர் உடைக்க வேண்டும்.

இனிப்புகள் தயாரிக்கும்போது சர்க்கரைக்குப் பதில் வெல்லம் அல்லது தேன் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தினால் சுவை கூடுதலாக இருக்கும்.

வெங்காயம் வதக்கும்போது சிறிதளவு சர்க்கரை சேர்த்தால் எளிதில் வதங்கி விடும்.

ஊறுகாய் தயாரிக்கும்போது கைகளைப் பயன்படுத்தக் கூடாது மரத்தினால் ஆன கரண்டிகளையே பயன்படுத்துங்கள்.

கோதுமை மாவு அரைக்கும்போது அதனுடன் சோயா பீன்ஸையும் சேர்த்து அரைத்தால் சப்பாத்திகள் ஊட்டம் கூடுவதுடன் ருசியும் அபாரமாக இருக்கும்.

வெங்காயத்தைத் தோலோடு குளிர்ந்த நீரில் போட்டு பின்னர் நறுக்கினால் கண்களில் கண்ணீர் வராது.

பச்சை மிளகாய் ஒரு மாத காலத்திற்கு மேலாக கெடாமல் இருக்க ஒரு காகிதக் கவரில் சிறிய துளையிட்டு கவரில் பச்சை மிளகாய்களை அதில் போட்டு ஃப்ரிட்ஜில் வைக்கவும்.

ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துக்கொண்டு அதில் ஒரு தேக்கரண்டி உப்பை கலக்கவும் பிறகு இதில் முட்டையை போடவும் முட்டை மூழ்கினால் அது புதிய முட்டை. மிதந்தால் பழைய முட்டை.

இஞ்சி, பூண்டு, சட்னி தயாரிக்க இரண்டையும் 2க்கு மூன்று என்ற விகிதத்தில் சேர்க்க வேண்டும். இஞ்சியை குறைவாக பயன்படுத்தினால் பண்டம் ருசியாக இருக்கும்.

காய்ந்த பழங்களைப் பராமரிக்க அதை வைத்திருக்கும் பாத்திரத்தில் 23 கிராம்புகளை போட்டு வைத்தால் நீண்ட நாட்களுக்கு ருசி கெடாமல் இருக்கும்.

கேக் பேக் செய்யும்போது தேவையான நேரத்திற்கு முன்பாகவே பேகிங் ஓவனைத் திறக்காதீர்கள்.

தண்ணீரில் சிறிதளவு வினிகரைச் சேர்த்தால் விரிசல் விழுந்த முட்டையைக் கூட சமைக்கலாம்.

முட்டைக்கோசை சமைக்கும்போது ஒரு துண்டு இஞ்சியையும் சேர்த்து சமைத்தால் அதன் மணம் மாறாமல் இருக்கும்.

உருளைக் கிழங்குகளை பிளாஸ்டிக் கவர்களில் போட்டு வைக்கக்கூடாது. ஏனெனில் அதிலுள்ள ஈரத்தன்மையால் கிழங்கு அழுகி விடும் வாய்ப்பு இருக்கிறது.

# 52 ஜப்பானியர்களிடமிருந்து நாம் கற்கவேண்டிய பண்புகள்

1. ஜப்பானில் மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன் சேர்ந்து ஒவ்வொரு நாளும் பதினைந்து நிமிடங்கள் தங்கள் பள்ளிக்கூடங்கள் மற்றும் கழிப்பறைகளை சுத்தம் செய்கிறார்கள்.

2. ஜப்பானில் நாய் வளர்ப்பவர்கள் அதன் கழிவுகளை அகற்றுவதற்காக வெளியில் செல்லும்போது அதற்கெனவே வடிவமைக்கப்பட்ட பை ஒன்றினை கட்டாயமாக எடுத்துச் செல்வர்.

3. ஜப்பானில் சுகாதார ஊழியர்கள் சுகாதாரப் பொறியியலாளர் என அழைக்கப்படுகிறார். அவரது சம்பளம் அமெரிக்க டாலரில் 5,000/–த்திலிருந்து 8,000/– வரை ஆகும். ஒரு சுத்தபடுத்துனர் எழுத்து மற்றும் வாய் மொழித்தேர்வுகளுக்குப் பின்னரே தெரிவு செய்யப்படுகிறார்.

4. ஜப்பானில் இயற்கை வளங்கள் என்று எதுவும் இல்லை. அத்துடன் ஆண்டுக்கு நூற்றுக்கணக்கான பூமி அதிர்ச்சிகள் அங்கு ஏற்படுகின்றன. ஆனால் ஜப்பான்தான் உலகிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார நாடாகும்.

5. ஜப்பானில் முதல் வகுப்பிலிருந்து தொடக்கம் ஆறாம் வகுப்புவரையான மாணவர்களுக்கு மற்றவர்களுடன் எப்படி பழக வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

6. ஜப்பான் மக்கள் உலகிலேயே மிகப் பெரிய பணக்காரர்களாக இருந்தாலும் அவர்கள் ஒருபோதும் தங்களுக்கென்று வேலைக்காரர்கள் வைத்துக் கொள்வதில்லை. பெற்றோரே வீட்டையும்

7. ஜப்பான் பள்ளிக்கூடங்களில் முதலாம் ஆண்டிலிருந்து மூன்றாம் ஆண்டுவரை தேர்வுகள் இல்லை.கல்வியின் நோக்கம் செய்திகளை அறிந்து கொள்ளவும் ஒழுக்க நெறிகளை கற்றுக் கொள்ளவும்தானே தவிர தேர்வு மூலம் அவர்களை தரப்படுத்துவதற்கல்ல என்கிறார்கள்.

8. ஜப்பானில் மக்கள் உணவகங்களில் எந்தவிதத்திலும் உணவை வீணாக்காமல் தமக்குத் தேவையானதை அளவில் மட்டும் சாப்பிடுகிறார்கள். உணவு வீணாதல் என்பதே அங்கு இல்லை.

9. ஜப்பானில் சராசரியாக ஓர் ஆண்டில் தொடர்வண்டிகள் தாமதமாக வந்த நேரம் அதிகபட்சமாக 7 வினாடிகள் மட்டுமே.

10. ஜப்பானில் மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் சாப்பிட்ட பின் உடனேயே அங்கேயே பல் துலக்குகிறார்கள். அவர்களுக்கு சாப்பிடும் உணவு சரியாக செரிமானம் அடைய வேண்டும் என்பதற்காக சாப்பிடுவதற்கு அரை மணி நேரம் ஒதுக்கப்படுகிறது.

# 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களுக்கா

## வினாத்தொகுப்பு

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம்-5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சையின் வினாத்தாள் 1 இற்கான மாதிரி வினாக்கள்



ஆசிரியர்: என்.எஸ்.தீபன் B.A, PG Dip in Edu, Dip in Teach
வ/பூந்தோட்டம் ம.வித்தியாலயம்

17. நேற்று புதன்கிழமை எனின் நாளை மறுதினத்திற்கு அடுத்தநாள் என்ன நாள்?
1. ஞாயிறு 2. சனி 3. வெள்ளி 4. திங்கள்

* 18ஆம், 19ஆம் வினாக்களுக்கு பின்வரும் தரவை அடிப்படையாக கொள்க.
கபிலனை விட கஜன் உயரம் குறைந்தவன், ரமணன் கபிலனை விட உயரம் கூடியவன், நிசார் கபிலனை விட உயரம் குறைந்தவன், ஆனால் கஜனை விட உயரம் கூடியவன்.


18. நால்வருள்ளும் உயரம் கூடியவர் யார்?
1.. கபிலன் 2. கஜன் 3. ரமணன் 4. நிசார்

19. நால்வரையும் உயர அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தினால் மூன்றாவதாக இருப்பவர் யார்?
1. கஜன் 2. நிசார் 3. ரமணன் 4. கபிலன்

20. பகல் - வெளிச்சம் எனின் இரவு ..........................................................
1. சந்திரன் 2. நட்சத்திரம் 3. தூக்கம் 4.. இருள்

21. வானம் -ஆகாயம் எனின் காடு -------------
1. நாடு 2. வனம் 3. மிருகம் 4. மரம்


* 22ஆம், 23ஆம், வினாக்களுக்கு பின்வரும் கோட்டு வரைபை பயன்படுத்துக.




22. காயத்திரிக்குD என்ன உறவு முறை?
1. அண்ணன் 2. அப்பா 3. பாட்டன் 4. மாமா

23. S உடைய தாயாக இருக்கக்கூடியவர் யார்?
1. காயத்திரி 2. சாரதா 3.K 4.பாமா

24. கபிலனின் வயது 9ஆகும். தந்தையின் வயது கபிலனின் வயதின் 4 மடங்காகும். தந்தையினதும் தங்கையினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 42 ஆகும். எனின் தங்கையின் வயது யாது?
1) 4 வயது 2) 6 வயது 3) 8 வயது 4) 5 வயது

25. 


ஒருவர் Aயில் இருந்து புறப்பட்டு Bயை அடையும் வரை எத்தனை முறை வலது பக்கம் திரும்பி உள்ளார்?

1) 3 2) 4 3) 5 4) 6

26. பின்வருவனவற்றுள் நான்கு தீக்குச்சிகளை வைத்து உரோம எண்ணாக்கக்கூடிய எண் யாது?


1) 4 2) 6 3) 7 4) 8

27. 


இவ் சதுர வடிவக்காணியைச் சுற்றி 2 தடவை நடந்த ஒருவர் எத்தனை மீற்றர் நடந்திருப்பார்?

1) 200m 2) 300m 3 400m 4. 600m

28. B போத்தலை நிரப்ப A போத்தலால் எத்தனை தடவை நீர் ஊற்ற வேண்டும்?






1) 2 2) 4 3) 6 4) 8

29. பின்வருவனவற்றுள் கடலில் எப்போதும் காணக்கூடியது எது?

1) அலை 2) மீன் 3) நீர் 4) கப்பல்

30. பின்வருவனவற்றுள் சதுர எண்ணாக வரக்கூடிய பரப்பளவு எது?





31. 


A, Bஆகிய இரு தராசுகளிலும் உள்ள பொருட்கள் சமனாவதற்கு A தராசில் இருந்து B தராசிற்கு இட வேண்டிய நிறை யாது?

1) 1kg 2. 500g 3. 250g 4. 1kg 500g

## வர்ணம் தீட்டி பரிசுகளை வெல்லுங்கள்



பெயர் : ........................................

முகவரி : ........................................

தரம் : ........................................

தொ.பே.இல : ........................................

பாடசாலை : ........................................

வ.ஆசிரியர் ஒப்பம் : ........................................

குறிப்பு: 5ம் ஆண்டுக்கு உட்பட்ட மாணவர்களின் ஆக்கங்கள் மட்டுமே போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படும்

உங்கள் ஆக்கங்களை 25.06.2015 க்கு முன் கிடைக்குமாறு எமது வழமையான முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

தெரிவு செய்யப்படும் 3 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணப் பொருட்கள் பரிசாக வழங்கப்படும்

பிரதான அனுசரணையாளர்:

NSC Super Choice

நியூ சுப்பர் சொய்ஸ்



Dealers in: Electronic goods
Watchess, Clocks, Fan and Gift Items

161, Bazaar Street, Vavuniya. 077 8525336 / 071 3861908

# இராசி கற்கள்

**மேஷம் - பவளம்:**
மேஷராசிக்காரர்கள் அணிய வேண்டியது பவளம். இதை அணிவதால் தெய்வ கடாட்சம் கிடைக்கும். கோபம் தணியும், அதிர்ஷ்டம் உண்டாகும்.

**ரிஷபம் - வைரம்**
ரிஷப ராசிக்காரர்கள் அணிய வேண்டியது வைரம் இதை அணிந்தால் மகிழ்ச்சியையும் யோகத்தையும் வசீகரத்தையும் கொடுக்கும்.

**மிதுனம் - மரகதம்:**
மிதுன ராசிக்காரர்கள் அணிய வேண்டியது மரகதம். இது செய்யும் தொழிலில் விருத்தியும், அதிர்ஷ்டத்தையும் அளிக்க வல்லது.

**கடகம் - முத்து**
கடக ராசிக்காரர்கள் அணிய வேண்டியது முத்து. இது அமைதியும் மகிழ்ச்சியும் செல்வ விருத்தியும் அளிக்க வல்லது.

**சிம்மம் - மாணிக்கம்**
சிம்ம ராசிக்காரர்கள் அணிய வேண்டியது மாணிக்கம். இதை அணிந்தால் மிகுந்த அதிர்ஷ்டசாலியாகலாம்.

**கன்னி - மரகதம்**
கன்னி ராசிக்காரர்கள் அணிய வேண்டியது மரகதம். இது செய்யும் தொழிலில் விருத்தியும் அதிர்ஷ்டத்தையும் அளிக்க வல்லது

**துலாம் - வைரம்**
துலாம் ராசிக்காரர்கள் அணிய வேண்டியது வைரம். இதை அணிந்தால் மகிழ்ச்சியையும், யோகத்தையும், வசீகரத்தையும் கொடுக்கும்.

**விருச்சிகம் - பவளம்**
விருச்சிக ராசிக்காரர்கள் அணிய வேண்டியது பவளம். இதை அணிந்தால் தெய்வ கடாட்சம் கிடைக்கும். கோபம் தணியும், அதிர்ஷ்டம் உண்டாகும்.

**தனுசு - கனக புஷ்பராகம்.**
தனுசு ராசிக்காரர்கள் அணிய வேண்டியது கனக புஷ்ப ராகம். இந்தக் கல் பார்ப்பதற்கு மஞ்சள் நிறமாக இருக்கும். இது மன அமைதியையும் செல்வ விருத்தியையும் கொடுக்கும்.

**மகரம் - நீலக்கல்**
மகர ராசிக்காரர்கள் அணிய வேணிடியது நீலக்கல். செல்வ விருத்தியையும், செல்வாக்கையும், தெய்வீகத்தன்மையையும் கொடுக்க வல்லது

**கும்பம் - நீலக்கல்**
கும்ப ராசிக்காரர்கள் அணிய வேணிடியது நீலக்கல். செல்வ விருத்தியையும், செல்வாக்கையும், தெய்வீகத்தன்மையையும் கொடுக்க வல்லது.

**மீனம் - கனக புஷ்பராகம்.**
மீன ராசிக்காரர்கள் அணிய வேண்டியது கனக புஷ்ப ராகம். இந்தக் கல் பார்ப்பதற்கு மஞ்சள் நிறமாக இருக்கும். இது மன அமைதியையும், செல்வ விருத்தியையும் கொடுக்கும்.

# Saji's Watawela Spring Water (PVT) Ltd

GMP — GOOD MANUFACTURING PRACTICE

SLS 894

# Nelu

*Bottled Drinking Water*

Ministry of Health Reg. No: CFA/BW/23/2012/11



**Available in:**

**500ml, 1000ml, 1500ml, 5 Liter, 19 Liter Bottles**

Distributor:

**K.R.R. Engineering Contractor and Supplier (PVT) Ltd**

118/6, Poonthoddam Road, Vavuniya.
Tel: 024 2222990 / 077 3727316

Source: Tube well, Sajinda Estate, Watawala. Factory: Sajinda Estate, Watawala, Sri Lanka.




# WES
World • Express • Services

# WORLD EXPRESS SERVICES
INTERNATIONAL LOCAL COURIER SERVICE

குறைந்த செலவில் துரித கதியில் உங்கள் உறவினர் நண்பர்களுக்கு பரிசுப் பொருட்களையும் பொதிகளையும் அனுப்பிவைக்க எங்களை நாடுங்கள்

**எமது சேவையின் சிறப்பியல்புகள்**

விரைவானதும் துரிதமானதுமான Door to Door சேவைகள்.

எந்தவொரு நாட்டுக்கும் 3 அல்லது 4 வேலைநாட்களில் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

10Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவுகள்

தேவையேற்படின் உங்கள் இடங்களுக்கே வந்து பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படும்

யாழ் மற்றும் அனைத்து உள்நாட்டுப் பிரதேசங்களுக்கும் துரித கதியிலான சேவை




இல:180/5, புகையிரதநிலையவீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா. 024 4903200 / 024 4928455

Head Office: No:338, Aluth Mawatha Road, Colombo 15. Tel: 0112 520 894 / 0114 345 966

**OUR BRANCHES**

| Kotahena: | Negombo: | Batticaloa: | Jaffna: |
|---|---|---|---|
| No:42, Kotahena Street, Colombo 13, Tel: 011 24 24 221 | No: 95,Sea Street, Negambo, Tel: 031 222 4544 031 493 6899 | No:419,Trinco Road,Batticaloa. Tel: 065 2228 995 065 4927 477 | No: 295, Palali Road,Jaffna. Tel: 021 2220 356 021 4923 677 |

**Hotline: 0773 870 952 / 0114 640 650**


Printed by and Published by Vijay Printing Centre, No:172B, Mill Road, Vavuniya. in June, 2015